தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### சர்க்கார்பதியிலிருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் திறப்பு

பி.ஏ.பி. திட்டத்தின் முக்கிய அணையான திருமூர்த்தி அணைக்கு சர்க்கார்பதி மின் நிலையம் வழியாக காண்டூர் கால்வாயில் புதன்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. பல்வேறு காரணங்களால் சேதமடைந்த காண்டூர் கால்வாயை உலக வங்கி நிதியுதவியுடன் புதுப்பிக்கும் பணிகள் கடந்த 2011 ஆண்டு துவங்கின. திருமூர்த்தி அணைக்கு காண்டூர் கால்வாய் வழியாக தண்ணீர் வழங்கும் நாள்கள் போக மீதி காலங்களில் கால்வாய் புதுப்பிக்கும் பணிகள் செய்யப்பட்டன. தற்போது, இப் பணிகள் செவ்வாய்க்கிழமை நிறுத்தப்பட்டன. இதையடுத்து, சர்க்கார்பதி மின் நிலையம் வழியாக காண்டூர் கால்வாயில் புதன்கிழமை காலை தண்ணீர் திறக்கப்பட்டது. விநாடிக்கு 530 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு, 12 மெகாவாட் மின் உற்பத்தியும் துவங்கப்பட்டது. தண்ணீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதில் கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சுப்ரமணியம் உள்பட பொதுப்பணித் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

### தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

தமிழகத்தில் வியாழக்கிழமை (ஆக.21) பரவலாக மழை பெய்யலாம் என்றும் சென்னையிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் பிற இடங்களிலும் ஆங்காங்கே மழை பெய்யலாம் என்று முன்னறிவிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தென்மேற்குப் பருவ மழையின் தாக்கம், வெப்பச் சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அதே வேளையில் சென்னையில் பகல் நேரத்தில் புழுக்கம் நிலவுகிறது. காற்றின் ஈரப்பதத்தில் ஏற்படும் மாறுபாடு காரணமாகவே

சென்னையில் புழுக்கம் நிலவுவதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர். புதன்கிழமை காலை நிலவரப்படி கரூர், கோவில்பட்டி, தூத்துக்குடி, கோவை, பழனி, நீலகிரி, ராஜபாளையம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிவகங்கை, தேனி உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது. அதிகபட்சமாக கரூர் மாவட்டம் அயனூரில் 70 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

## விவசாயத்துக்கு தொழில் துறை அந்தஸ்து: ஜி.கே.மணி வலியுறுத்தல்

விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், தொழில் துறை அந்தஸ்தை தமிழக அரசு அளிக்க வேண்டும் என்று பாமக மாநிலத் தலைவர் ஜி.கே.மணி கேட்டுக் கொண்டார். வேலூரில், ஒருங்கிணைந்த மத்திய மாவட்ட பாமக பொதுக்குழுக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்ற ஜி.கே.மணி நிருபர்களிடம் கூறியது: தமிழகத்தில், வேலையில்லாப் பட்டதாரிகள் ஏறத்தாழ 95 லட்சம் பேர் இருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. சிறு, குறு, நடுத்தர தொழில்களை மேம்படுத்தினால், லட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும். இவற்றுக்கு புத்துயிர் ஊட்ட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசின் திட்டத்துக்கு, தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படும் மடிக்கணினிகளை கொள்முதல் செய்ய வேண்டும். வேளாண் சார்ந்த தொழிற்சாலைகளை தொடங்குவதன் மூலம், ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியும். அத்துடன் விவசாயிகளும் பயன் பெறுவர். விவசாயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், தொழில் துறை அந்தஸ்தை அரசு அளிக்க வேண்டும். தமிழகத்தில், கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி வழியாக கெயில் நிறுவனம் குழாய் பதிக்க உச்ச நீதிமன்றம் தடை விதித்துள்ளது. ஆனால், கெயில் நிறுவனம் அப்பணியை துரிதப்படுத்த முற்பட்டு வருகிறது. மத்திய, மாநில அரசுகள் தலையிட்டு இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும். நிர்வாக வசதிக்காக வேலூர், கோவை, விழுப்புரம், சேலம், திருநெல்வேலி மாவட்டங்களை இரண்டாக அரசு பிரிக்க வேண்டும். கரும்பு விவசாயிகளுக்கு, அரசு நிர்ணயித்த தொகையை தனியார் சர்க்கரை ஆலைகள் வழங்க உரிய நடவடிக்கை எடுப்பதோடு, நிலுவையில் உள்ள தொகையை

உடனடியாக வழங்க உத்தரவிட வேண்டும். மக்கள் நலப்பணியாளர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். சத்துணவுப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், ஓய்வூதியம் வழங்க வேண்டும். அரசு போக்குவரத்துக் கழகங்கள் தனியார் மயமாக்கப்படுவதைக் கைவிட வேண்டும். பெண்கள் தற்கொலையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளதாக தேசிய ஆவணக் காப்பகம் தகவல் தெரிவித்துள்ளது. கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் போன்ற குற்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. இவற்றுக்கெல்லாம் காரணம் மது பானம் என்பதால், தமிழக அரசு மக்கள் நலன் காக்க டாஸ்மாக் கடைகளை உடனடியாக மூட வேண்டும் என்றார் ஜி.கே.மணி.

**<u>இயற்கைவழி விவசாய உற்பத்தி பொருள்களுக்கு சந்தை மதிப்பு அதிகம்: வேளாண் கல்லூரி முதல்வர்</u>**

இயற்கைவழி விவசாயத்தைச் செய்துவரும் விவசாயிகள் சாகுபடி முறைகளை பதிவுசெய்து கொண்டால், விளைபொருளுக்கான சந்தை மதிப்பை முழுமையாகப் பெற முடியும் என மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் சி.சின்னுசாமி தெரிவித்தார். மதுரை வேளாண் அறிவியல் மையத்தில் இயற்கைவழி வேளாண்மை குறித்த பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது. இதில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர். இதில் கல்லூரி முதல்வர் சி.சின்னுசாமி பேசியதாவது: மண்ணில் அங்ககச் சத்துப் பொருள்கள் 0.5 சதத்துக்கும் கீழ் குறைந்துவிட்டதை தற்போது சரிசெய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அங்ககச் சத்தை மண்ணில் 2 சதம் அளவுக்கு கொண் டுவந்தால் மண் வளமடையும். இத்தகைய நிலத்தில் உற்பத்தியாகும் விளைபொருள்களுக்கு சந்தையில் நல்லவரவேற்பும், விளைபொருளுக்கு அதிக பணமதிப்பும் கிடைக்கிறது. இயற்கைவழி விவசாயத்துக்கான தொழில் நுட்பங்களை வேளாண்மை பல்கலைக்கழகம், மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் வேளாண் அறிவியல் மையமும் வழங்கும். விவசாயிகள் இதை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார். மதுரை அங்கக சான்றளிப்புத் துறை ஆய்வாளர் சி.ஞானசேகர் பேசுகையில், இயற்கைவழி விவசாயம் செய்யும்

விவசாயிகள் மூன்று ஆண்டுகளுக்கு அந்த நிலத்தில் ரசாயன உரம், பூச்சி மருந்தை பயன்படுத்தியிருக்கக்கூடாது. இயற்கைவழி விவசாயிகள் தங்கள் சாகுபடிக்கான உரிமத்தை அங்கக சான்றளிப்புத் துறையில் பதிவுசெய்து உரிமம் பெறவேண்டும். சிறுகுறு விவசாயிகள் ஆண்டுக்கு ரூ.2700-ம் பெரிய விவசாயிகள் ஆண்டுக்கு ரூ.3,200-ம், குழு அமைத்துச் செயல்படும் விவசாயிகள் ரூ.8,500-ம் செலுத்த வேண்டும் என்றார். அதற்கான விண்ணபப்பங்கள் மற்றும் விளக்கம் அளித்த ஆய்வாளர் மேலும் விவரங்களுக்கு மதுரை வேளாண் அறிவியல் மையத்தை தொடர்புகொள்ளுமாறு தெரிவித்தார். இம்முகாமில், வேளாண் அறிவியல் மைய உதவிப் பேராசிரியர் செல்விரமேஷ், இயற்கைவழி வேளாண்மைத் தொழில் நுட்பங்களை விளக்கிப்பேசினார். அறிவியல் மையத் தலைவர் தி.ரங்கராஜன் முகாமை ஒருங்கிணைத்தார். பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**<u>வேளாண் விளைபொருள் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்க விண்ணபப்பிக்கலாம்</u>**

தேனி மாவட்டத்தில் வேளாண்மை விளைபொருள் பதப்படுத்தும் தொழிற் சாலை அமைக்க விரும்புவோர் மாவட்ட வேளாண்மை வணிக துணை இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தெரிவித்துள்ளார். செய்திக் குறிப்பு: மாவட்டத்தில் உள்ள விவசாய நிலங்களில் 1,02,700 டன் உணவு தானியம், 98,000 டன் பயறு வகை பயிர்கள், 5,98,000 டன் பழ வகைகள், 1,60,000 டன் காய்கறிகள், 38,000 டன் நறுமணப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அறுவடை செய்யும் விளைபொருள்களுக்கு உடனுக்குடன் விற்பனை செய்யும் நிலையில் விவசாயிகள் உள்ளனர். மதிப்புக் கூட்டு பொருளாக விற்பனை செய்தால் நல்ல விலையும், அதிக லாபமும் கிடைக்கும். வேளாண்மை சார்ந்த தொழிலாகிய பால் பொருள் உற்பத்தி, பதப்படுத்தப்பட்ட கோழி, இறைச்சி மற்றும் மீன் ஆகியவையும் மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள் பட்டியலில் சேரும். மதிப்புக் கூட்டுப் பொருள் உற்பத்திக்காக வேளாண்மை பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. வேளாண்மை விளைபொருள் பதப்படுத்தும் தொழிற்

சாலைகளை அரசுத் துறை, பொதுத் துறை, தனியார், கூட்டு நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் சார்பில் தொடங்கலாம். இத் தொழிற்சாலைக்கு நபார்டு வங்கி மூலம் நிதி உதவி வழங்கப்படும். தொழிற்சாலை அமைக்க விரும்புவோர் தேனி, ரத்தினம் நகரில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர்(வேளாண்மை வணிகம்) அலுவலகத்தில் நேரிலும், செல்போன் எண்:95007 85009 மூலமும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம் என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## <u>விவசாயிகளை வீடு வீடாகச் சென்று அழைக்க முடிவு</u>

முதல்வர் ஜெயலலிதாவுக்கு 5 மாவட்ட விவசாயிகள் சார்பில் மதுரையில் நடைபெற உள்ள பாராட்டு விழாவில் பங்கேற்க விவசாயிகளை வீடுவீடாகச் சென்று அழைப்பது என்று மாவட்ட அதிமுக நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தேனியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்கு மாவட்ட அதிமுக அவைத் தலைவர் நல்லவேலுச்சாமி தலைமை வகித்தார். தேனி மக்களவை உறுப்பினர் ரா.பார்த்திபன், ஆண்டிபட்டி சட்டப் பேரவை உறுப்பினர் தங்க.தமிழ்ச்செல்வன், மாவட்ட அதிமுக இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலர் ஓ.பி.ரவீந்திரநாத்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாராட்டு விழாவில் கலந்து கொள்வதற்கான ஏற்பாடுகள் குறித்து மாவட்டச் செயலர் டி.சிவக்குமார் பேசினார். முல்லைப் பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் தேக்குவதற்கு நடவடிக்கை எடுத்த முதல்வர் ஜெயலலிதாவுக்கு தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் சார்பில் மதுரையில் ஆக.22-இல் நடைபெற உள்ள பாராட்டு விழாவில் பங்கேற்க, மாவட்டத்துக்கு உள்பட்ட பகுதிகளில் அதிமுக சார்பில் விவசாயிகளுக்கு வீடு வீடாகச் சென்று அழைப்பு விடுவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. முன்னாள் எம்.பி., சையதுகான், மாவட்ட அதிமுக துணைச் செயலர் ராமர், தேனி நகரச் செயலர் எஸ்.முருகேசன், ஒன்றியச் செயலர் ஆர்.டி.கணேசன், மாவட்ட எம்.ஜி.ஆர்.,மன்ற செயலர் முருகன், போடி நகர் மன்றத் தலைவர் வி.ஆர்.பழனிராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆக.22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தருமபுரி மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகிற வெள்ளிக்கிழமை (ஆக.22) நடைபெறுகிறது. மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகள், கோரிக்கைகளைத் தெரிவித்து பயனடைய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## ஆக.26-இல் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி வகுப்பு நாமக்கல்லில் செவ்வாய்க்கிழமை (ஆக.26) நடைபெறும். நாட்டுக்கோழி வளர்ப்பும், மூலிகை முதலுதவி மருத்துவமும் என்ற தலைப்பில் நாமக்கல் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உள்ள கோழிகளுக்கான மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் நடக்க உள்ள இந்தப் பயிற்சியில் பண்ணையாளர்கள், ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். மேலும் விவரங்களுக்கு 04286- 233230 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என, அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. ராசிபுரம் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் மஞ்சள் ஏலமுறை செவ்வாய்க்கிழமைதோறும் நடைபெறும். இந்த வாரம் நடந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். கூட்டுறவுச் சங்க வளாகத்தில் நடந்த ஏலத்தில் தலா 65 கிலோ கொண்ட 1,466 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. இதில் விரலி ரகம் குவிண்டாலுக்கு அதிகபட்சமாக மூட்டை ரூ.7,240-க்கும், குறைந்தபட்சமாக

ரூ.6,369-க்கும் ஏலம் போனது. இதேபோல, உருண்டை ரகம் அதிகபட்சமாக மூட்டை ரூ.6,680-க்கும் குறைந்தபட்சமாக ரூ.5,669-க்கும் விலை போனது. பனங்காலி அதிகபட்சமாக மூட்டை ரூ.13,500-க்கும், குறைந்தபட்சமாக ரூ.11,039-க்கும் ஏலம் போனது. இதில் ஒரே நாளில் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

**<u>விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆக.26-க்கு மாற்றம்</u>**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆகஸ்ட் 26-ம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் ஜெயசிறி முரளிதரன் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் ஆகஸ்ட் 22-ம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நிர்வாகக் காரணங்களுக்காக ஆகஸ்ட் 26 (செவ்வாய்க்கிழமை) நடைபெறும். விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம் என ஆட்சியர் அச்செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்

**<u>அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஆக. 22) நடைபெறுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் ஆக. 22-ம் தேதி காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள பிரதான கூட்ட அரங்கில் நடைபெறுகிறது. இந்தக் கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்ப்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்த முறையீடுகள் விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் குறைகளை தெரிவிக்கலாம்

## கரூர் மாவட்டத்தில் பரவலாக மழை

கரூர் மாவட்டத்தில் கடந்த திங்கள்கிழமை முதல் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கடந்த மூன்றாண்டுகளாக கடும் வறட்சி நிலவியதால் குடிநீருக்காக பொதுமக்கள் சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட்டுவந்தனர். மேலும், விவசாயிகள் கால்நடை களுக்குக்கூட தண்ணீர் கிடைக்காமல் அவதிப்பட்டனர். இந்த நிலையில், மூன்றாண்டுகளுக்கு பிறகு கடந்த மாதம் கரூர் அமராவதியின் நீர்பிடிப்பு பகுதியில் பலத்த மழை பெய்ததையடுத்து, அமராவதி அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 1000 கன அடி வீதம் 6 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால், அமராவதி ஆற்றுப்பாசன விவசாயிகள் தங்களது பகுதிக்கு விவசாயத்திற்கு தண்ணீர் திறக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். ஆனால், அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படாததால், விரக்தியில் இருந்த விவசாயிகளுக்கு கடந்த திங்கள்கிழமை முதல் பெய்துவரும் பருவமழை ஓரளவுக்கு கைகொடுத்துள்ளது. இதனால், விவசாயிகள் மானாவாரி நிலங்களில் கடலை, சோளம் போன்ற பயிர்களின் சாகுபடியை தொடங்கியுள்ளனர். இதுகுறித்து பாலவிடுதியைச் சேர்ந்த விவசாயி சண்முகம் கூறுகையில், கடந்தாண்டைப் போல இல்லாமல், இந்த ஆண்டு ஓரளவுக்கு மழை பெய்து வருகிறது. இதனால் மகிழ்ச்சியில் உள்ளோம். இந்த பருவமழையால் விவசாயம் செழிக்க வாய்ப்புள்ளது என்றார். கரூர் மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு மாயனூரில் 70 மி.மீட்டரும், கிருஷ்ணராயபுரத்தில் 2 மி.மீட்டரும் மழை பெய்துள்ளது.

## <u>தமிழ்ப் பல்கலை.யில் மூலிகை பண்ணையை விரிவாக்கத் திட்டம்</u>

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மூலிகைப் பண்ணையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் துணைவேந்தர் ம. திருமலை. இந்தப் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல், மூலிகை அறிவியல் துறை சார்பில் புதன்கிழமை நடைபெற்ற மாறும் சூழலும் - சுற்றுச்சூழல் கல்வியின் அவசியமும் என்ற தலைப்பில் தஞ்சாவூர் மாவட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாமில் அவர் மேலும் பேசியது: இப் பல்கலைக்கழகம் 865 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இங்கு ஏற்கெனவே 7 ஏக்கரில் மூலிகைப் பண்ணை

இருந்தது. காலப்போக்கில் பயனற்றதாகி விட்டது. இதை மீண்டும் உயிர்ப்பிக்க ரூ. 8 லட்சத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 25 ஏக்கராக மூலிகை பண்ணையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கோவை மேட்டுப் பாளையத்தில் உள்ள வனவியல் கல்லூரியிலிருந்து விலையில்லா 1,000 மரக்கன்றுகள் விரைவில் பெறப்படவுள்ளன. இதில், 100 மரக்கன்றுகள் பல்கலைக்கழக வளாகத்தில் நடப்படவுள்ளன. இவற்றில் செம்மரக்கன்றுகள் அதிக அளவில் இருக்கும். இந்த மரங்கள் மூலம் 15 ஆண்டுகளில் தலா ரூ. 15 லட்சம் வருவாய் கிடைக்கும். இதற்காகத் தமிழ்நாடு காகித நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இந்த மரக்கன்றுகள் நடுவதற்கான குழிகள் தோண்டப்பட்டுள்ளன. செப்டம்பர் மாத இறுதி வாரத்தில் நடப்படவுள்ளன. இதுதொடர்பாக நடத்தப்படவுள்ள விழாவில் பங்கேற்கவுள்ள பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் இலவசமாக விநியோகம் செய்யப்படவுள்ளன. மேலும், பள்ளிக்கு 3 மரக்கன்றுகள் வீதம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் திருமலை. பின்னர் போட்டிகளில் வெற்றி வெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது. முதன்மைக் கல்வி அலுவலர் வே. தமிழரசு, மாவட்டக் கல்வி அலுவலர் கோ. ரங்கநாதன், பல்கலைக்கழக அறிவியல் புலத் தலைவர் இரா. பாஸ்கரன், உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஆக. 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆக. 28-ம் தேதி காலை 10.30 மணியளவில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறவுள்ளது. ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில், விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று, தங்களது நிறை, குறைகளை தெரிவித்துப் பயன்பெறலாம் என மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 28ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

காஞ்சிபுரம் : மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் வியாழக்கிழமை நடைபெறும் என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார். காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம், வரும் 28ம் தேதி, காலை 11:00 மணிக்கு, ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் நடைபெறவுள்ளது இந்த கூட்டத்தில், வேளாண்துறை மற்றும் அதன் சார்பு துறைகள் சம்பந்தமான புகார் மற்றும் கோரிக்கை மனுக்கள் அளிக்கலாம். கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி; செப்., 1ல் துவக்கம் திருத்தணி : மாடுகளை தாக்கும் கோமாரி நோயை கட்டுப்படுத்த, ஏழாவது தவணையாக, வரும் செப்., 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை தடுப்பூசி போடும் பணி நடக்கிறது. திருத்தணி கால்நடை உதவி கோட்டத்தில், 19வது கால்நடை கணக்கெடுப்பின் படி, மொத்தம் 84 ஆயிரம் (பசு, காளை மற்றும் எருமை) மாடுகள் உள்ளன. இந்த மாடுகளுக்கு ஆண்டுக்கு ஒரு முறை கோமாரி தடுப்பு ஊசி போடப்பட்டு வந்தது. கடந்த, 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல், ஆண்டுக்கு இருமுறை (மார்ச், செப்டம்பர்) கோமாரி தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது.அந்த வகையில், ஏழாவது தவணையாக, வாய் மற்றும் கால் புண்கள் ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுப்பதற்கு, வரும் செப்டம்பர் முதல் தேதியில் இருந்து, 21ம் தேதி வரை, கோட்டத்தில் உள்ள அனைத்து மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது. இதுகுறித்து, திருத்தணி கோட்ட கால்நடை துறை உதவி இயக்குனர் மருத்துவர் செல்லத்துரை கூறியதாவது:அடுத்த மாதம், முதல் தேதி, ஏழாவது தவணையாக மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி துவங்கப்படுகிறது. தொடர்ந்து 21 நாட்கள்

அனைத்து கிராமங்களுக்கும் கால்நடை உதவி மருத்துவர்கள், ஆய்வாளர்கள் நேரில் சென்று மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடுவர்.இதற்காக, திருத்தணி கோட்டத்தில் மட்டும், ஒரு உதவி மருத்துவர், ஒரு ஆய்வாளர், ஒரு கால்நடை உதவியாளர் என, மூன்று பேர், கொண்ட, 20 குழுக்கள் அமைக்கப்பட்டு, அவர்கள், 84 ஆயிரம் கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடுவர்.மேலும், மாடு அதிகமாக இருந்தாலும், அவற்றிற்கும் கோமாரி நோய் தடுப்பூசி ஊசிகள் கூடுதலாக வரவழைத்து போடப்படும். கடந்த மார்ச் மாதம், 83,700 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

**<u>அறுவடைக்கு தயார் நிலையில் சம்பா பருவ நெற்பயிர்</u>**

பொன்னேரி : விளைநிலங்களில், சம்பா பருவத்திற்கு பயிரிட்ட நெற்பயிர்கள், அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. மீஞ்சூர் ஒன்றியத்தில், சம்பா பருவத்திற்காக, 18 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், கடந்த மே- - ஜூன் மாதங்களில், நெல் பயிரிட நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், பெரும்பாலான விவசாயிகள் 'கோ- 43', 'டிகேஎம் -9', 'ரூபாலி' உள்ளிட்ட நெல் வகைகளை பயிரிட்டிருந்தனர். நடவு, களைப்பணிகள் முடிந்து, தற்போது நெற்பயிர்கள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளன. இரு தினங்களுக்கு முன் வரை, பொன்னேரி பகுதியில் பரவலாக மழை பெய்து கொண்டிருந்தது.விளைநிலங்களில் நெற்பயிர்கள் விழுந்து, வீணாகும் நிலை ஏற்பட்டதால், விவசாயிகள் விரக்தியில் இருந்தனர். இந்நிலையில், இரண்டு தினங்களாக, சூரியன் சுட்டெரிப்பதால், விவசாயிகள் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ள நெற்பயிர்களை இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்ய திட்டமிட்டு வருகின்றனர்.ஒரு சிலர், அறுவடை பணிகளை மேற்கொண்டும் உள்ளனர். அதில், சாதாரண நடவு பணி மேற்கொண்டவர்கள், ஏக்கருக்கு 25 முதல் 30 மூட்டை வரையும், திருந்திய நெல்

சாகுபடி முறையில் பயிரிட்டவர்கள், 35 முதல் 40 மூட்டை வரையும், நெல்அறுவடை செய்து உள்ளனர்.

**<u>நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

திருவள்ளூர் : விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாளை (22ம் தேதி) நடைபெற உள்ளது. திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம், நாளை (22ம் தேதி), காலை, 11:00 மணியளவில் நடைபெற உள்ளது.இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை, வணிகம், மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார். விவசாயிகளுக்கு சாகுபடி கருத்தரங்கு செஞ்சி: செஞ்சி தாலுகா செம்மேடு ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலையில் மகளிர் கரும்பு விவசாயிகளுக்கான நவீன சாகுபடி குறித்த கருத்தரங்கு நடந்தது. கரும்பு துணை பொது மேலாளர் விஜயகுமார் தலைமையில் விரிவாக்க மேலாளர் வெங்கடேச பெருமாள், துணை மேலாளர் ராஜேஷ் கண்ணன், கரும்பு உதவி மேலாளர் சிவசண்முகம், விரிவாக்க அலுவலர் சதீஷ் ஆகியோர் பயிற்சி அளித்தனர். சொட்டு நீர் பாசனம், செதில் பரு நாற்று நடவு, உயிர் உரங்கள் உபயோகித்தல் மற்றும் மகளிர் தொழில் முனைவோர், ஆலையுடன் இணைந்து செயல்படுவதற்கான வழிமுறைகள் குறித்து விளக்கினர். மகளிர் விவசாயிகளுக்கு திக்காமேடு கிராமத்தில் விவசாயி ராதாகிருஷ்ணன் நிலத்தில் காட்டு பன்றியை விரட்டும் இயந்திரத்தின் செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது.

## நவீன ரக தென்னை கன்றுகள் விற்பனை

நாமக்கல்: "சவுகாட் உள்ளிட்ட நவீன ரக தென்னை கன்றுகள், வேளாண் அறிவியல் நிலையத்தில் விற்கப்படுகிறது' என, அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால், நாமக்கல் வேளாண் அறிவியல் மையத்தில், நவீன ரக தென்னை கன்றுகள் விற்பனைக்கு வந்துள்ளது. அதில், மேற்கு கடற்கரை, சவுகாட், நெட்டை ரக இளநீர் தென்னை கன்றுகள் சப்ளை செய்யப்படுகிறது. இந்த ரக தென்னை கன்றுகளை, மழை காலங்களில் நடவு செய்தால், நல்ல வளர்ச்சி பெற்று வருவாய் கொடுக்கும். வேளாண் அறிவியல் நிலையத்தில், ஆறு முதல், எட்டு மாதம் வரை வளர்க்கப்பட்ட மரக்கன்றுகள் விற்பனைக்கு உள்ளது. எனவே, விவசாயிகள், பண்ணையாளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, நவீன ரக தென்னை கன்றுகளை நடவு செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## முட்டை விலை 300 காசாக உயர்வு

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று, நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர் விவாதித்தனர். அதையடுத்து, முட்டை கொள்முதல் விலையில், 295 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, ஐந்து காசு அதிகரித்து, 300 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 330, பெங்களூரு, 315, மைசூர், 322, ஹைதராபாத், 300, மும்பை, 338, விஜயவாடா, 307, கொல்கத்தா, 365, பர்வாலா, 315, டில்லி, 328. இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில், நேற்று,

நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை, 56 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. பல்லடத்தில், நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, 85 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## மார்க்கெட்டில் பூக்கள் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

ப.வேலூர்: சுபமுகூர்த்தம் துவங்கி உள்ளதால், பூக்களின் விலை உயர்ந்துள்ளது. இது பயிரிட்டுள்ள விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது. ப.வேலூர், கபிலர்மலை, பிலிக்கல்பாளையம், பரமத்தி, கரூர் அடுத்த சோமங்கி, ஈரோடு அடுத்த சிவகிரி, திருச்சி அடுத்த காட்டுப்புத்தூர், உன்னியூர் பகுதிகளில், குண்டுமல்லி, சம்பங்கி, முல்லை, கோழிகொண்டை உள்ளிட்ட பூக்கள் பயிரிடப்பட்டுள்ளது. சாகுபடி செய்யப்பட்ட பூக்களை அறுவடை செய்து, ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு ஏலத்துக்கு கொண்டு வரப்படுகிறது. அங்கு, உள்ளூர் வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுக்கின்றனர். தற்போது சுபமுகூர்த்த சீஸன் துவங்கி உள்ளதால், பூக்களின் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம், 300க்கு விற்பனையான, ஒரு கிலோ குண்டுமல்லி நேற்று, 500 ரூபாய்க்கு விற்பனையானது. 200 ரூபாய்க்கு விலைபோன சம்பங்கி, 300 ரூபாய்க்கு விலை போனது. அதேபோல், கிலோ 80க்கு விற்பனையான அரளி, 130 ரூபாய்க்கு விற்பனையானது. 200க்கு விலைபோன முல்லை பூ, 300 ரூபாய்க்கு விலைபோனது. இந்த விலை உயர்வு, பயிரிட்ட விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி

தர்மபுரி: பாப்பிரெட்டிப்பட்டியில், வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் வேளாண்மை விரிவாக்க துணை இயக்கம் இணைந்து, பப்பாளி மற்றும் மரவள்ளி ல் முக்கிய பிரச்னையான மாவு பூச்சியினை கட்டுப்படுத்த ஒட்டுண்ணி உபயோகம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி, மோளையானூர் மற்றும் அலமேலுபுரம் கிராமத்தில்

நடந்தது. பாப்பிரெட்டிப்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க துணை இயக்கத்தின் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரவி வரவேற்றார். பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் நிலையத்தின் பேராசிரியர் தமிழ்ச்செல்வன் பயிற்சியை துவக்கி வைத்து பேசினார். வேளாண் அறிவியல் நி லையத்தின் பூச்சியல்துறை விஞ்ஞானி சண்முகம், ஒட்டுண்ணியின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். தொடர்ந்து, விவசாயிகளுக்கு ஒட்டுண்ணி இலவசமாக வழங்கப்பட்டது. இப்பயிற்சியில், உதவி வேளாண்மை அலுவலர்களான ஜெயக்குமார், முனியப்பன், சக்தி உள்பட பலர் பங்கேற்றனர். உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம் ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## சோதனை அடிப்படையில் கால்நடை தீவன சாகுபடி

தர்மபுரி: கால்நடைகள் மேய்ச்சலுக்கு, அரசு சார்பாக சோதனை அடிப்படையில், தீவன பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில், ஆண்டுக்கு ஆண்டு பருவ மழை பொய்த்து வருவதால் பெரும்பலான விவசாயிகள் மாற்று தொழிலுக்கு மாறி வருகின்றனர். இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி கொண்ட ரியல் எஸ்டேட் அதிபர்கள், விவசாயிகளிடம் இருந்து நிலங்களை வாங்கி வீட்டுமனைகளாக மாற்றி, விற்பனை செய்து வருகின்றனர். ரியல் எஸ்டேட் மூலம் கிடைக்கும் அதிக வருவாய்க்கு ஆசைப்பட்டு, விவசாயிகள் தங்களது விளை நிலங்களை வீட்டுமனைகளாக மாற்றி, விற்பனை செய்து வருகின்றனர். இதனால், விவசாயம் பாதிக்கப்பட்டு வருவதுடன், அதை சார்ந்த கால்நடை வளர்ப்பும் பாதிக்கப்பட்டு வருகிறது. இதனால், விவசாயிகள் வளர்த்து வரும் ஆடு, மாடுகளுக்கும், அரசு வழங்கி வரும் விலையில்லா ஆடு, மாடுகளுக்கும், போதிய தீவனம் கிடைக்காமல், அவதி அடைந்து வரும் நிலை உள்ளது. கால்நடைகளுக்கு போதிய தீவனம் விலையில்லாமல் கிடைக்க, தமிழக அரசு கால்நடைத்துறைக்கு சொந்தமான இடங்களில் தீவன பயிர்களை சோதனை அடிப்படையில் சாகுபடி செய்து, மேய்ச்சல் நிலங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது. தர்மபுரி மாவட்டம், அரக்காசனஹள்ளியில் கால்நடைத்துறைக்கு சொந்தமாக உள்ள, 55 ஏக்கர் நிலத்தில், இத்திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு, 10 லட்ச ரூபாய்

ஒதுக்கி உள்ளது. இதில், ஏழு லட்ச ரூபாய் மதிப்பில் நிலம் சீரமைக்கப்பட்டு, தீவன பயிரான முயல் மசால் என்ற தீவனம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தீவன சாகுபடி அளவு கணக்கெடுப்புக்கு பின், அரக்காசன பகுதியில் உள்ள கால்நடைகளை, இப்பகுதியில் மேய்ச்சலுக்கு அனுமதிக்க, கால்நடைத்துறையினர் முடிவு செய்துள்ளனர். இதுகுறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கால்நடைகளுக்கு ஏற்பட்டு வரும் தீவன பற்றக்குறையை போக்க, தமிழக அரசு, குறைந்த விலையில் வைக்கோல்களை வழங்கி வருகிறது. மேலும், கால்நடைகளுக்கு தீவனம் வழங்க பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக, கடந்த, ஓராண்டுக்கு முன் தர்மபுரி மாவ்டடம், அரக்காசனஹள்ளியில் கால்நடைத்துறைக்கு சொந்தமான இடம் சீரமைக்கப்பட்டு, முயல் மசால் எனப்படும் தீவனப்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தாண்டு, அரக்காசனஹள்ளியில் தென்மேற்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால், எதிர்பார்த்த அளவுக்கு தீவன வளர்ச்சி இல்லை. 10 ஆண்டுகளுக்கு மேல், ஆனாலும் கூட, முளைக்கும் வகையில் பக்குவப்படுத்தப்பட்ட விதைகள் விதைக்கப்பட்டு உள்ளதால், தீவன பயிரின் வளர்ச்சியை கணக்கிட, வட கிழக்கு பருவமழையை எதிர்நோக்கி உள்ளோம். வடகிழக்கு பருவமழைக்கு பின், தீவன பயிர் வளர்ச்சி குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும். அரசின் உத்தரவுக்கு பின், இத்திட்டத்தை மாவட்டம் முழுவதும், விரிவுபடுத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும், என்றனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி: கால்நடை துறை சுறுசுறு

திருப்பூர்: கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கான ஏற்பாடுகளை, கால்நடை துறையினர் தீவிரமாக செய்து வருகின்றனர்.தமிழகத்தில் பரவலாக மழை பெய்துள்ள நிலையில், காலநிலை மாற்றத்தால், கோமாரி உள்ளிட்ட நோய்கள், கால்நடைகளை பாதிக்க வாய்ப்புள்ளது. கோமாரி நோயை தடுக்க, கால்நடை பராமரிப்பு துறையால், ஆண்டுதோறும் மார்ச் மற்றும் செப்., மாதத்தில், தடுப்பூசி போடப்படுவது வழக்கம். நடப்பாண்டில் இரண்டாவது முறையாக, வரும் செப்., ஒன்று முதல், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

போடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. திருப்பூர் கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) ராமச்சந்திரன் கூறியதாவது: இம்மாவட்டத்தில், மொத்தம், 3.12 லட்சம் மாடுகள், எருமைகள் உள்ளன. கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போட, கால்நடைத்துறை ஆயத்தமாக உள்ளது. தடுப்பூசி போடும் பணி, செப்., ஒன்றில் துவங்கி, 21 நாட்களுக்கு நடைபெறும். இதற்காக, டாக்டர்கள், 75 குழுக்களாக பிரிக்கப்பட்டு, ஊத்துக்குளி, தாராபுரம், காங்கேயம், சேவூர், அவிநாசி போன்ற பகுதிகளில், தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்வர். கோமாரி நோய்க்காக, ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டிருந்தாலும், நான்காண்டுக்கு ஒருமுறை, பழைய வைரஸின் உருவத்தில் இருந்து மாறுப்பட்டு, புதியது உருவெடுக்கும். எனவே, கால்நடை வளர்ப்போர், தங்களது மாடுகளுக்கு, அவசியம் கோமாரி தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார்.

## ரூ. 41 லட்சம் மதிப்பில் தேங்காய் பருப்பு விற்பனை

வெள்ளகோவில்: வெள்ளகோவில் ஒழுங்கு முறைக்கூடத்தில், பிரதி வாரம் புதன்கிழமை தோறும் தேங்காய் பருப்பு (கொப்பரை தேங்காய் பருப்பு) ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில், 137 விவசாயிகள், 950 மூட்டை தேங்காய் பருப்புகளை, ஏலத்துக்காக கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தர கொப்பரை பருப்பு, அதிகப்பட்சமாக, 111.30 ரூபாய்க்கும், குறைந்த பட்ச விலையாக, 104.35 ரூபாய்க்கும் ஏலம் போனது. மேலும், கொண்டு வரப்பட்ட பருப்பில், தரம் பிரிக்கப்பட்டு, இரண்டாம் ரக பருப்புகள், 105.65 ரூபாய்க்கும், குறைந்த பட்ச விலையாக, 77.20 ரூபாய்க்கும் விற்பனையானது. மொத்தம், 950 மூட்டைகளில், 40 ஆயிரத்து, 994 கிலோ தேங்காய் பருப்பு, 41 லட்சத்து, 25 ஆயிரத்து, 302 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரத்தை விட, தேங்காய் பருப்பு விலை சற்று குறைந்திருந்தது. ஆனால், கடந்த வாரம், 1,100 மூட்டைகள் பருப்பு, விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது என, ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்தார்.

## திருச்சியில் வேளாண் பல்கலை விவசாயிகள் சங்கம் கோரிக்கை

திருச்சி: கர்நாடகா, மஹாராஷ்டிரா மாநிலங்களை போல, தமிழகத்திலும் கூடுதலாக வேளாண் பல்கலைக் கழகங்களை அமைக்க வேண்டும், என காவிரி டெல்டா பாசன விவசாயிகள் நலச்சங்கம், அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. செயல்தலைவர் மகாதானபுரம் ராஜாராம் கொடுத்துள்ள கோரிக்கை மனுவில், தமிழக அரசு, "மிஷன்- 2023' மூலமாக உணவு உற்பத்தியை பெருக்கவும், விவசாயி களுக்கு நியாயமான விலை கிடைக்க, நவீன தொழில் நுட்பங்களை வேளாண் துறையில் புகுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. பள்ளிப் படிப்பை முடித்தவர்கள், வேளாண் படிப்பில் அதிகம் சேர ஆர்வம் காட்டுகின்றனர். அதற்காக, மாநிலத்தில் கூடுதலாக வேளாண் கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்கள் மற்றும் பல்கலைக் கழகங்களை புதிதாக துவங்க வேண்டும். தமிழகத்தில், வேளாண் பருவ சூழ்நிலைக்கு ஏற்ப, ஏழு மண்டலமாக பிரிக்கப்பட்டு உள்ளது. ஒவ்வொரு மண்டலத்துக்கும் தேவையான ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க தேவைகளை கருத்தில் கொண்டு, மகத்துவ மையம், திறன் மேம்பாட்டு மையம் தொடங்கப்பட உள்ளது. வேளாண் தொழில்நுட்ப வல்லுனர்கள், ஆராய்ச்சி யாளர்கள் இன்னும், 10 ஆண்டுகளுக்கு, 15 ஆயிரம் பேர் தேவைப்படுகின்றனர். எனவே, திருச்சியை மையமாக கொண்டு, வேளாண் பல்கலைக்கழகம் புதிதாக துவங்க வேண்டும். சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களை உள்ளடக்கி, ஒரு தோட்டக்கலை பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும். கர்நாடகா, மஹாராஷ்டிரா மாநிலங்களில், வேளாண் பல்கலைக்கழகங்கள் அதிகப்படியாக உள்ளன. தமிழகத்திலும், "மிஷன் -2023' திட்டத்தை பூர்த்தி செய்ய, வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்களை புதிதாக துவக்க வேண்டும், என்று தெரிவித்துள்ளார்.

## <u>மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி அதிகரிப்பு</u>

கரூர்: கரூர் மாவட்டத்தில், மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி அதிகரித்து, விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர். கரூர் மாவட்டம், வேட்ட மங்கலம் குந்தானிபாளையம், கவுண்டன்புதூர், ஓரப்புப் பாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின்னாம் பள்ளி, கீரனூர், நாமகிரி பேட்டை, தொ.ஜேடர்பாளை யம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் ஜவ்வரிசி தயார் செய்யும் கிழங்கு மாவு மில்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த சில வாரங் களாக மரவள்ளிக் கிழங்கு, ஒரு டன், 8,000 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த வாரம், 5,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது. சிப்ஸ் தயாரிப்பவர்கள் ஒரு டன் மரவள்ளிக் கிழங்கு, 5,500 ரூபாய்க்கு வாங்கிச் செல்கின்றனர். இந்நிலையில் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆனால், தேவை குறைந்துள்ளது. இதனால், விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் விவசாயிகள் கலக்கத்தில் உள்ளனர்.

## <u>அறிவியல் கண்காட்சி கலெக்டர் துவக்கி வைப்பு</u>

பெரம்பலூர்: பெரம்பலூரில் நடந்த புத்தாக்க அறிவியல் கண்காட்சியை, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது துவக்கி வைத்தார். பெரம்பலூர் மாவட்டத்தில், இன்ஸ்பயர் விருதுக்காக விண்ணப்பித்த, 94 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தலா, 5,000 ரூபாய்க்கான செக்குகள் வழங்கப்பட்டது. அவர்கள் தயாரித்த அறிவியல் காட்சிப்பொருட்கள், பெரம்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்த புத்தாக்க அறிவியல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியை, பெரம்பலூர் கலெக்டர் தரேஷ்அஹமது துவக்கி வைத்து பார்வையிட்டார். கண்காட்சியில் மாணவ, மாணவிகள் சுற்றுச்சூழல் பாதுகாப்பு,

மாற்று எரிசக்தி, சொட்டு நீர் மூலம் பாசனம் செய்தல், நடமாடும் தோட்டம் அமைத்தல், மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில், அறிவியல் படைப்புகளை வைத்தனர். பள்ளி மாணவ, மாணவிகளின் அறிவியில் படைப்புகளை பார்வையிட்டு, அதில் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்கள், அறிவியல் கோட்பாடுகள், செயல்படும் விதம், பயன்பாடுகள் குறித்து கேட்டறிந்தார். அறிவியல் புத்தாக்க கண்காட்சியில், முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவ, மாணவிகள் செப்டம்பர் மாதம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நடக்க உள்ள மாநில அளவிலான அறிவியல் புத்தாக்க கண்காட்சியில் கலந்து கொள்ள உள்ளனர். நிகழ்ச்சியில் பயிற்சி அலுவலர் அஸ்வின், முதன்மை கல்வி அலுவலர் மகாலிங்கம், மாவட்ட கல்வி அலுவலர் பாலு, தொடக்க கல்வி அலுவலர் எலிசபத் உட்பட பலர் பங்கேற்றனர்

## <u>காட்டாறு அணை திறப்பு</u>

பட்டுக்கோட்டை: பட்டுக்கோட்டை அருகே வெண்டாக்கோட்டையில் நசுவினி ஆற்றில் உள்ள காட்டாறு அணையிலிருந்து, பாசனத்துக்காக, தண்ணீர் திறக்கப்பட்டது. பட்டுக்கோட்டை ஒன்றிய தலைவர் மலையய்யன், தஞ்சை மாவட்ட அ.தி.மு.க., இளைஞரணி செயலாளர் ஜெயப்பிரகாஷ்நாராயணன், அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியன், செந்தில் ஆகியோர் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து வைத்தனர். அணையின் வலது மற்றும் இடது பக்க வாய்க்கால்கள் மூலம், 74 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. இந்த வாய்க்கால்கள் மூலம் வெளியாகும் தண்ணீரால், பொன்னவராயன்கோட்டை, அணைக்காடு, பழஞ்சூர், மழவேனிற்காடு, வெண்டக்கோட்டை, கள்ளிக்காடு, துவரங்குறிச்சி, மறவக்காடு உள்ளிட்ட, 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 7,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

**<u>வேட்டங்குடி சரணாலயத்திற்கு பறவைகள் வருகை; "மழை அதிகரிக்கும்' கிராம மக்கள் நம்பிக்கை</u>**

திருப்புத்தூர் : திருப்புத்தூர் அருகே,வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் கொள்ளுகுடிப்பட்டி கண்மாய்க்கு, பறவைகள் வரத் துவங்கியுள்ளதால்,தொடர்ந்து மழை பெய்யும் என கிராமத்தினர் நம்பிக்கை தெரிவித்தனர். சிவகங்கை மாவட்டம் ,திருப்புத்தூரிலிருந்து 15 கி.மீ.,தொலைவில்,மதுரை ரோட்டில்,வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் உள்ளது. இச்சரணாலயத்திற்கு, செப்டம்பரில் பறவைகள் வரத்துவங்கும். மழை பெய்வதைப் பொறுத்து, இது மாறுபடும். கடந்த இரண்டு ஆண்டுகளாக, பருவ மழை பொய்த்ததால்,பறவைகள் தங்காமல் சென்று விட்டன. இந்நிலையில்,கடந்த சில நாட்களாக மழை பெய்வதை அடுத்து,நேற்று முன் தினம் முதல்,சரணாலயத்திற்கு பறவைகள் வரத்துவங்கியுள்ளன.கொக்கு,பாம்பு தாரா, வெள்ளை அரிவாள் மூக்கன்,நத்தை கொத்தி நாரை, நீர்க்காகம், சாம்பல் நாரை உள்ளிட்ட பறவைகள், மரத்தில் கூடு கட்டத் துவங்கியுள்ளன. கிராமத்தினர் கூறுகையில்," பறவைகள் கண்மாய் நடுவில், கூடு கட்டுகிறது. நீண்டகாலம் தங்குவதாக இருந்தால், பறவைகள் கூடு கட்டும் . இந்த ஆண்டு நிச்சயம் மழை தொடர்ந்து பெய்யும்' என்றனர். தற்போது, இக்கண்மாயில், ஆழ்துளைக் கிணற்றிலிருந்து, வனத்துறையினரால் பம்ப் செய்யப்பட்ட, சிறிதளவு தண்ணீர் மட்டுமே கண்மாயில் உள்ளது. மழை தொடர்ந்து,இப்பகுதி கண்மாய்கள் பெருகினாலே, தொடர்ந்து பறவைகள் தங்கி இனவிருத்தி நடைபெறும்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தக்காளி விலை சரிந்தது




ராயக்கோட்டை : கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ராயக்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தக்காளி சாகுபடி பிரதானமாக உள்ளது. இங்கு தோட்டங் களில் பறிக்கப்படும் தக்காளியை விவசாயிகள் ராயக்கோட்டையில் உள்ள சந்தைக்கு மொத்தமாக கொண்டு வந்து ஏலத்தில் விற்பனை செய்து வருகின்றனர். கடந்த வாரம் 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி, நேற்றைய ஏலத்தில் 650 ரூபாயாக சரிந்தது. சில்லரையில் கிலோ ரூ.26க்கு விற்றது.இதுகுறித்து மொத்த வியாபாரிகள் கூறுகையில், ‘கடந்த வாரம் நாள் ஒன்றுக்கு 4,000 கூடையாக இருந்த தக்காளி வரத்து, தற்போது 5,000 கூடையாக அதிகரித்துள்ளது. இதே நிலவரம் அனைத்து இடங்களிலும் உள்ள மார்க்கெட்டுகளில் காணப்படுகிறது. இதனால், வெளியூர் வியாபாரிகளின்

வரத்தும் சரிந்துள்ளது. உள்ளூர் வியாபாரிகள் மட்டுமே தக்காளி கொள்முதலுக்கு வருவதால் விலை சரிந்துள்ளது' என்றனர்.

**<u>பரமத்தி வேலூரில் வெல்லம் விலை உயர்வு</u>**

பரமத்திவேலூர், : நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா பிலிக்கல்பாளையத்தில் புதன், சனிக்கிழமையில் வெல்ல ஏலம் நடைபெறும். இந்த ஏலத்தில் நாமக்கல், கரூர், சேலம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு, கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொள்கின்றனர். ஏலத்தில் எடுத்த வெல்ல சிப்பங்களை கர்நாடகா, ஆந்திரா, கேரளா, மஹாராராஷ்டிரா, உத்ராஞ்சல், உத்திரப் பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் உருண்டை வெல்லம் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ1100 க்கும், பெரிய அச்சுவெல்லம் 30 கிலோ கொண்ட ஒரு சிப்பம் ரூ1100க்கும் ஏலம் போனது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 30 கிலோ கொண்ட உருண்டை வெல்லம் ஒரு சிப்பம் தி1200க்கும், 30 கிலோ கொண்ட ஒரு அச்சுவெல்லம் ஒரு சிப்பம் ரூ1200க்கும் ஏலம் போனது. உருண்டை வெல்லம் 11ஆயிரம் சிப்பமும், அச்சு வெல்லம் 6,000 சிப்பமும் ஏலத்திற்கு வந்தது. வெல்லம் விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**<u>பாகற்காய் விலை உயர்வு கிலோவுக்கு ரூ10 அதிகரிப்பு</u>**

போச்சம்பள்ளி, : போச்சம்பள்ளியில் பாகற்காய் விலை கிலோவுக்கு ரூ10 வரை அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி பகுதியில் சொட்டுநீர் பாசனம் மூலம் கத்தரிக்காய், முள்ளங்கி, வெண்டைக்காய், அவரை உள்ளிட்ட பல்வேறு காய்கறிகளை சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது, பாகற்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. வயல்களில் அறுவடை செய்யப்படும்

பாகற்காய்களை போச்சம்பள்ளியில் உள்ள வியாபாரிகளுக்கு விவசாயிகள் விற்பனை செய்து வந்தனர். வியாபாரிகள் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்து வந்தனர். இதையடுத்து கிருஷ்ணகிரி, ஓசூர், திருப்பத்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு பாகற்காய்களை விற்பனைக்காக அனுப்பி வைத்தனர். இதனால், உள்ளூர் தேவை அதிகரித்ததால் விலையும் உயர்ந்துள்ளது. கடந்த மாதம் கிலோ பாகற்காய் 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, கிலோ 35 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**<u>போச்சம்பள்ளி பகுதியில் தொடர் மழை அவரை, பச்சைபயறு விதை விலை உயர்வு</u>**

போச்சம்பள்ளி, : தொடர் மழை எதிரொலியாக போச்சம்பள்ளி பகுதியில் அவரை, பச்சைபயறு உள்ளிட்ட சிறுதானிய விதைகளின் விலை உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சுற்று வட்டார பகுதிகளில் தொடர் மழையால் விவசாயிகள் வேளாண் பணிகளை முடுக்கி விட்டுள்ளனர். தங்கள் நிலத்தில் உளுந்து, காராமணி, பச்சைபயறு போன்ற சிறு தானியங்கள் சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இதனால், அவசர கதியில் அருகில் உள்ள கடைகளுக்கு சென்று அங்கு சில்லரையில் விற்பனை செய்யப்படும் தானியங்களை வாங்கிச் சென்று விதைகளாக பயன்படுத்தி வருகின்றனர். இதனால், கடைகளில் அதன் விலை உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு 40 ரூபாய்க்கு விற்ற சோளம் 50 ரூபாய்க்கும், 50 ரூபாய்க்கு விற்ற காராமணி 60 ரூபாய்க்கும், 90 ரூபாய்க்கு விற்ற பச்சைபயறு 100 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. விலை உயர்வை பொருட்படுத்தாமல் மழை பெய்த மகிழ்ச்சியில் மக்கள் வாங்கிச் செல்கின்றனர். இதனை பயன்படுத்தி போலி விதைகளை விற்பனை செய்ய வாய்ப்புள்ளதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே, மளிகை கடைகளில் சில்லரையில் விற்பனை செய்யப்படும் தரமற்ற விதைகளை வாங்கிச்சென்று வயல்களில் விதைப்பு செய்து,

விவசாயிகள் நஷ்டத்தை சந்திக்கும் முன்பாக தரமான விதை வினியோகத்திற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேளாண் ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருச்செந்துறையில் இன்று வாழைத்தார் பொது ஏலம்

திருச்சி, : திருச்செந்துறையில் உள்ள ஒருங்கிணைந்த வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் இன்று (20ம் தேதி) நடைபெறுகிறது. இதில் விவசாயி கள், வியாபாரிகள் பங் கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. திருச்சி வேளாண் விற்பனை குழு சார்பில் ஸ்ரீரங்கம் திருச்செந்துறையில் இயங்கி வரும் ஒருங் கிணைந்த வாழை வணிக வளாகத்தில் இன்று (புதன்) காலை 11மணி முதல் 1 மணி வரை வாழைத்தார் பொது ஏலம் நடைபெற உள்ளது. அந்தநல்லூர், மணிகண்டம், திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி,தொட் டியம் ஆகிய வட்டாரங் களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் டெல்டா மாவட்ட விவசாயிகளும் அறுவடை செய்துள்ள வாழைத்தார்களை திருச்செந்துறை ஒருங்கிணைந்த வாழை வணிக வளாகத்திற்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் கலந்து கொள்ளலாம். மேலும் உற்பத்தி செய்த வாழைத்தார்களுக்கு இந்த பொது ஏலம் மூலம் நல்ல விலை பெறுவதோடு, எந்தவித கமிஷமின்றி உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுவதால் விவசாயிகள் இதில் பங்கேற்று பயன்அடையலாம். எனவே, ஏலம் எடுப்பதற் காக வியாபாரிகள் பங்கேற்குமாறு திருச்சி வேளாண் விற்பனை மற் றும் வேளாண் வணிகத் துறை துணை இயக்குநர் சந்திரசேகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

## மன்னார்குடி வேளாண் பொறியியல் அலுவலகத்தில்

மன்னார்குடி, : மன்னார்குடியில் செயல்படும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் சிறு குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் நடவு இயந்திரங்களை வாடகைக்கு கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் மற்றும் மன்னார்குடியில்

தான் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இரண்டு அலுவலகங்களுக்கும் தலா 5 ஒன்றியங்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் திருவா ரூர் அலுவலகத்தில் இருப்பதுபோல் மன்னார்குடி வேளாண்மை பொறியியல் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுவதற்கான நடவு இயந்திரங்கள் இல்லை. தனியார் நடவு இயந்திரங்களை பயன்படுத்தினால் ஒரு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரத்து 500 செலவாகிறது. வேளாண்மை துறை மூலம் நடவு செய்யும்போது நாற்று உற்பத்தி செலவு உட்பட சுமார் ரூ.3 ஆயிரம் வரைதான் செலவாகும். ஏனெனில் தனியாரிடம் நடவு இயந்திரத்தைமட்டும் வாடகைக்கு பெற முடியாது. தேவையான நாற்றுக்களையும், அதற்கான இடுபொருட்களையும் சேர்த்துதான் தனியாரிடம் பெற வேண்டியுள்ளது. மேலும் பராமரிப்பு செலவு இவற்றையெல்லாம் சேர்த்து பணம் செலுத்தவேண்டியுள்ளதால் தனியார் இயந்திர நடவு செலவு அதிகமாக உள்ளது. சிறு, குறு விவசாயிகள் பயன்படும் வகையில் நடவு இயந்திரத்தை அரசு வேளாண்மை பொறியியல் துறை மூலமாகவே ஏற்பாடு செய்தால் விவசாயிகள் தங்களை முன்பதிவு செய்துகொண்டு தங்களது வயலிலேயே இயந்திரங்கள் நடுவதற்கான நாற்றுக் களையும் உற்பத்தி செய்வார் கள். இதன்மூலம் விவசாயிகளும் உரிய பயிற்சி பெறுவதற்கும், செலவை மிச்சப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமையும். இதுபற்றி நீடாமங்கலம் விவசாயி மருதப்பன் கூறியது: மாவட்டத்தில் மட்டும் தற்போது சுமார் 1 லட்சத்து 45 ஆயிரம் எக்டேரில் சம்பா மற்றும் தாளடி சாகுபடிக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. ஒரே நேரத்தில் விவசாய பணிகள் தொடங்குவதால் ஆட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டு வருவது இயற்கையாக நடக்கிறது. அதனை சமாளிக்கத்தான் இயந்திரங்கள் பயன்படுத்துகின்றனர். சிறு, குறு விவசாயிகளால் இயந்திரங்களை விலைக்கு வாங்க முடியாது. அதனால்தான் வேளாண்மை பொறியியல் துறை மூலம் இயந்திரங்களை குறைந்த வாடகையில் தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. அந்த இயந்திரங்களுக்கு ஒரு ஏக்கர் நடவு செய்ய ஆகும் வாடகை

செலவு சுமார் ரூ.1200. நாற்று உற்பத்தியையும் சேர்த்தால் ரூ. 3 ஆயிரத்துக்குள் முடிந்து விடும். இந்நிலையில் மன்னார்குடி அலுவலகத்தில் நடவு இயந்திரம் இல்லை. திருவாரூரில் 2 நடவு இயந்திரங்களே உள்ளன. இந்த 2 இயந்திரங்களை மட்டும் பயன்படுத்தி விண்ணப்பிக்கின்ற அனைத்து விவசாயிகளுக்கும் வாடகைக்கு வழங்கி விட முடியாது. எனவே மன்னார்குடியில் குறைந்தது 10 நடவு இயந்திரங்களும், திருவாரூரில் 10 நடவு இயந்திரங்களையும் இந்தாண்டு வாடகைக்கு விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். வரும் ஆண்டுகளில் தேவைக்கு ஏற்ப இந்த எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றார்.ராஜீவ் சிலைக்கு காங்.மாலை மயிலாடுதுறை, : முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 70வது பிறந்தநாள்விழா நேற்று மயிலாடுதுறையில் கொண்டாடப்பட்டது. ராஜன் தோட்டத்தில் அமைந்துள்ள இந்திய விளையாட்டு ஆணையத்தின் சிறப்புச்சரக விளையாட்டு மைய வளாகத்தில் உள்ள ராஜிவ் காந்தி சிலைக்கு காங்கிரஸ் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நகர தலைவர் செல்வம் தலைமையில் பண்ணை சொக்கலிங்கம், முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் கமலநாதன், ராமகிருஷ்ணன், நாவலர்காந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>புதிய பயிர் காப்பீட்டு திட்டம் திருவாரூரில் நாளை ஆலோசனை விவசாயிகளுக்கு அழைப்பு விவசாயிகளுக்கு அழைப்பு</u>

மன்னார்குடி : புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தை ரத்து செய்து, பழைய பயிர் காப்பீடு திட்டத்தையே இவ்வாண்டு அமல்படுத்த வேண்டும் என்பதை அரசிடம் வலியுறுத்துவதற்கும், இதில் விவசாயிகளின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிக்க திருவாரூர் மாவட்ட அனைத்து விவசாய சங்க நிர்வாகிகள் ஆலோசனை க்கூட்டம் திருவாரூரில் நாளை 21ம் தேதி நடைபெறுகிறது. இது குறித்து தமிழ்நாடு வேளாண்மை டிராக்டர் விவசாயிகள் சங்கத் தலைவர் பிஆர்.பாண்டி யன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது; காவிரி டெல்டா மாவட்டங்கள் தொடர்ந்து வறட்சியாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்

பட்டு விவசாயம் தொடர்ந்து இழப்பை சந்தித்து வரு கிறது. இதனால் விவசாயி கள் தற்கொலைக்கு தள்ளப்படுவதிலிருந்து பாது காக்க தேசிய வேளாண்மை பயிர் காப்பீட்டுத்திட்டம் என்ற பெயரில் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதனை தற்போது மத்திய அரசு மேம்படுத்தப்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டமாக அறிமுகப்படுத்தியுள்ளது. மாநில அரசுகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பழைய காப்பீடு அல்லது புதிய காப்பீடு திட்டம் வேண்டுமா என்பதை தீர்மானித்துக் கொள்ளலாம் எனவும் மத்திய அரசு அறிவித்தது. பழைய காப்பீட்டுத் திட்டத்தில் சென்ற ஆண்டு வரை ஏக்கருக்கு ரூ. 84 பிரிமியம் செலுத்தும் விவசாயிகள் நெற்பயிர் மழை வெள்ளம் அல்லது வறட்சியால் பாதித்தாலோ அல்லது நோய் தாக்குதலால் உற்பத்தியிழப்பு ஏற்பட்டலோ ரூ. 8694 வரை முழு இழப்பீடாக பெற்றுக் கொள்ளும் நிலை இருந்தது. ஆனால் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள புதிய காப்பீடு திட்டத்தில் ஏக்கருக்கு ரூ.335 பிரிமியம் செலுத்தி இழப்பீடாக வெறும் ரூ. 2638 மட்டுமே பெறமுடியும் என்று மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. எனவே புதிய காப்பீடு திட்டம் எந்தவகையிலும் விவசாயிகளை பாதுகாக்காது என்றும் பழைய காப்பீட்டுத்திட்டத்தையே அமல்படுத்த வேண்டுமென தமிழக முதல்வர் ஜெயலலிதாவே கடந்த ஜனவரி மாதம் பிரதமருக்கு கடிதம் எழுதினார். ஆனால் முதல்வரின் செயல்பாட்டிற்கு மாறாக புதிய காப்பீடு திட்டத்தை தமிழக அரசின் வேளாண்மைதுறை டெல்டாவில் அமல்படுத்தியுள்ளது. இது விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது. நடப்பாண்டிலேயே பயிர்காப்பீடு திட்டத்தில் பிரிமியத் தொகையை 4 மடங்காக உயர்த்தி, இழப்பீட்டுத்தொகையையும் குறைத்துள்ளது விவசாயிகள் நம்பிக்கையையே இழக்கச் செய்துள்ளது. இதனை சுட்டிக்காட்டி சென்னை ஐகோர் ட்டில் பொது நலவழக்கு தாக்கல் செய்துள்ளோம். இந்நிலையில் இது குறித்து விரிவான முறையில் கலந்தாலோசனை செய்யவும் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யவும் நாளை 21ம் தேதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு திருவாரூர் விபிகே லாட்ஜில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள

அனைத்து விவாசாய சங்கங்களின் முன்னணி நிர்வாகிகள் கலந்துகொள்ளும் ஆலோசனைக்கூட்டம் நடைபெறவுள்ளது. விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

## <u>தொடரும் மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு</u>

பழநி, : தொடர் மழையின் காரணமாக பழநி பகுதியில் அணைகளுக்கு நீர்வரத்து ஓரளவு அதிகரித்துள்ளது. பழநி நகர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் கடந்த 2 நாட்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று மாலை பழநி நகரில் சுமார் ஒரு மணி நேரம் கனமழை பெய்தது. தொடர் மழையின் காரணமாக பழநி நகரில் வெப்பம் தணிந்து குளிர்காற்று வீசுகிறது. நேற்று காலை நிலவரப்படி பழநி நகரில் 15மிமீ மழையளவு பதிவாகி உள்ளது. பாலாறு-பொருந்தலாறு அணையில் 32 மிமீ மழை அளவு பதிவாகி உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 34 கனஅடியாக உள்ளது. 65 அடி உயரம் உள்ள இந்த அணையின் நீர்மட்டம் தற்போது 23.16 அடியாக உள்ளது. வரதமாநதி அணைக்கு நீர்வரத்து போதிய அளவில் இல்லை. மழையின் அளவு 5 மிமீ என பதிவாகி உள்ளது. நீர்வரத்து விநாடிக்கு 2 கனஅடியாக உள்ளது. 67 அடி உயரம் உள்ள இந்த அணையின் நீர்மட்டம் 45.01 அடியாக உள்ளது. குதிரையாறு அணை யில் 18மிமீ மழையளவு பதிவாகி உள்ளது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 55 கனஅடியாக உள்ளது. 80 அடி உயரம் உள்ள இந்த அணையின் நீர்மட்டம், நேற்று 31.50 அடியாக இருந்தது. நேற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கனமழை பெய்துள்ளதால், அணைகளுக்கு வரும் நீரின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் மற்றும் பழநி நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பழநி பகுதியில் 5 மணிநேரம் கொட்டி தீர்த்தது மழை

பழநி, : பழநி பகுதியில் 5 மணிநேரம் பெய்த தொடர் மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பழநி பகுதியில் கடந்த சில தினங்களாக கடும் வெயில் நிலவி வந்தது. பகல் நேரங்களில் பொதுமக்கள் வெளியில் நடமாட முடியாத சூழல் நிலவியது. நேற்று மாலை திடீரென கருமேகம் சூழ்ந்து மழை பெய்ய ஆரம்பித்தது. சுமார் 4 மணிநேரத்திற்கு மேல் இடைவிடாமல் பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. ரயிலடி சாலை, இட்டேரி சாலை, கவுண்டன்குளம் பகுதிகளில் சாலைகளில் மழைநீர் தேங்கி குளம் போல் காட்சி அளித்தது. பழநி நகரில் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தெருக்களில் குழாய்கள் பதிக்கும் பணி நடந்து வருகின்றன. இக்குழிகள் சரிவர மூடாததால் மழைநீர் தேங்கி, பொதுமக்கள் நடமாட முடியாதபடி சகதியாய் மாறியது. மேலும், மாலை நேரம் என்பதால் பள்ளி மற்றும் கல்லூரி முடிந்து வீட்டிற்கு திரும்பிய மாணவ-மாணவிகள் மழையில் நனைந்தபடியே சென்றனர். பழநி கோயிலுக்கு வந்த பக்தர்கள் மழையில் நனைந்தபடியே சாமி தரிசனம் செய்ய வரிசையில் காத்திருந்தனர். பழநி பகுதியில் சுமார் 5 மணிநேரம் மழை கொட்டி தீர்த்தது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளிலும் மழை பெய்ததால், பழநி நகர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களுக்கு ஆதா ரமான பாலாறு-பொருந்தலாறு, வரதமாநதி மற்றும் குதிரையாறு அணைகளுக்கும், கொடைக்கானல் சாலையில் உள்ள கோடைகால நீர்த்தேக்கத்திற்கும் நீர்வரத்து ஏற்படும் சூழ்நிலை உண்டாகி உள்ளது. இதுபோன்று தொடர்ந்து மழை பெய்தால் பழநி நகரின் குடிநீர் தட்டுப்பாடு நீங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். திண்டுக்கல்: திண்டுக்கல்லிலும் நேற்று இரண்டரை மணிநேரம் கனமழை பெய்தது. இதனால் நகரின் தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கியது. சாலைகளில் மழைநீருடன் சாக்கடை கழிவுநீர் பெருக்

கெடுத்து ஓடியதால் வாகன ஓட்டிகள் சிரமத்திற்குள்ளாகினர். மாலை 5 மணிக்கு ஆரம்பித்த மழை இரவு 7.30 மணி வரை நீடித்தது.

## <u>விவசாய நிலம் வாங்க விண்ணப்பிக்கலாம் கலெக்டர் தகவல்</u>

திருவண்ணாமலை, : தாட்கோ மூலம் வேளாண்மை நிலம் வாங்குதல், மருத்துவமனை அமைத்தல் திட்டங்களுக்கு விண்ணப்பிக்கலாம் என கலெக்டர் தெரிவித்துள்ளார். இது குறித்து கலெக்டர் ஞானசேகரன் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: எம்.பி.பி.எஸ், பி.டி. எஸ், பி.எஸ்,பி.பி.டி, டி.பாம்,பி.பாம், லேப் டெக்னீசியன், பாராமெடிக்கல் சென்டர் படிப்பு முடித்தவர்கள், மருத்துவமனை, மருந்துக் கடை, கண் கண்ணாடியகம், முட நீக்க மையம், ரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல் உள்ளிட்ட திட்டங்களுக்கு விண்ணப்பித்து பயன்பெறலாம். இத்திட்டங்களுக்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சம் இருக்க வேண்டும். மேலும் பெண்களுக்கு நிலம் வாங்கும் திட்டத்திற்கு வயது வரம்பு 18 முதல் 55 வரை இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 லட்சத்திற்குள்ளாக இருக்க வேண்டும் நிலம் மேம்படுத்தும் திட்டத்திற்கு இரு பாலரும் விண்ணப்பிக்கலாம். மேலும் நிலம் வாங்கும் திட்டத்திற்கு மூல பத்திரம், விற்பனை உடன்படிக்கை பத்திரம், வில்லங்க சான்று, சர்வே எண், சிட்டா அடங்கல், நில பத்திரம் மற்றும் நிலம் விற்பவரது சாதி சான்று விவரங்களை பதிவு செய்து ஆவணங்கள் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். எனவே தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் தாட்கோ மூலம் விண்ணப்பித்து பயனடை யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அவர் அதில் கூறி உள்ளார்.

## <u>ஏற்காட்டில் பரவலாக மழை</u>

ஏற்காடு, : ஏற்காட்டில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை 3 மணி முதல் 6 மணி வரை ஏற்காடு பகுதியில் மழை

பெய்தது. இதனால், ஏற்காட்டில் மிதமான சீதோஷண நிலை நிலவுகிறது. ஏற்காடு ஏரி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள கிணறுகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, கடந்த சில மாதங்களாக ஏற்காடு பகுதியில் நிலவிய குடிநீர் தட்டுப்பாடு சீரடைந்தது. நேற்று ஏற்காடு மற்றும் சுற்றுப்பகுதியில் 4வது நாளாக பரவலாக மழை பெய்தது. இதனால், காபி நாற்று நடவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வரத்து அதிகரிப்பு முலாம் பழம் ரூ 20 க்கு விற்பனை

போச்சம்பள்ளி, : கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மற்றும் மத்தூர் பகுதிகளில் முலாம் பழம் வரத்து அதிகரித்துள்ளதால் கிலோ ரூ20 க்கு விற்கப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி சுற்று வட்டாரத்தில் நீண்ட நாட்களுக்கு பின் பரவலாக மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் மழை பெய்தாலும், பகலில் கடும் வெயில் நிலவுவதால் பொதுமக்கள் தாகம் தீர்க்க பழச்சாறு, கரும்புசாற்றை பருகி உடல் உஷ்ணத்தை போக்கி வருகின்றனர். இதில் வெயிலுக்கு இதமான பழங்களில் ஒன்றான முலாம்பழம் தற்போது வரத்து அதிகரித்து காணப்படுகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ ரூ35 க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் வரத்து அதிகரித்ததால் இந்த வாரம் ரூ20க்கு விற்பனையானது.

## பலத்த மழை எதிரொலி அணைகளில் நீர் மட்டம் உயர்வு

மஞ்சூர், : நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பெய்த பலத்த மழையால் நீலகிரி மாவட்ட அணைகளில் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால் மின்சார உற்பத்தியும் அதிகரித்துள்ளது. நீலகிரியில் குந்தா, பைக்காரா நீர் மின் திட்டங்களின் கீழ் 12 நீர் மின்நிலையங்கள் இயங்குகின்றன. பல்வேறு அணைகளில் தேக்கி வைக்கப்படும் நீரின் மூலம் இந்த மின் நிலையங்கள் இயக்கப்படுகின்றன. இதில் குந்தா மின் நிலையத்தில் 60 மெகாவாட், கெத்தை

மின் நிலையத்தில் 175 மெகாவாட், பரளி மின் நிலையத்தில் 180 மெகாவாட், பில்லூர் மின் நிலையத்தில் 100 மெகாவாட், அவலாஞ்சி மின் நிலையத்தில் 40 மெகாவாட், காட்டுகுப்பை மின் நிலையத்தில் 30 மெகாவாட், சிங்காரா புஷ்ஷப் மின் நிலையத்தில் 150 மெகாவாட், பைக்காரா மின் நிலையத்தில் 59.2 மெகாவாட், பைக்காரா மைக்ரோ மின் நிலையத்தில் 2 மெகாவாட், முக்குறுத்தி மினி மைக்ரோ மின் நிலையத்தில் 0.70 மெகாவாட், மோயார் மின் நிலையத்தில் 36 மெகாவாட் மற்றும் மரவகண்டி மின் நிலையத்தில் 0.75 மெகாவாட் மின்சாரம் என மாவட்டத்தில் உள்ள மின் நிலையங்கள் மூலம் மொத்தம் 833.65 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தமிழக மொத்த மின் உற்பத்தியில் 10 சதவீதம் மின் உற்பத்தி இந்த மின்நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மின்சார உற்பத்திக்கு பின் மின் நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. மேலும் கோவை, ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய பவானி பாசன பகுதிகளின் விவசாய தேவைகளுக்கும் முக்கிய நீராதாரமாக உள்ளது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக நீலகிரியில் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக அணை கட்டுகள் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வரு கிறது. பல்வேறு இடங்களிலும் கன மழையினால் புதிய நீர் வீழ்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் நீர் வரத்து அதிகரித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் நீர் மட்டம் பெருமளவு உயர்ந்துள்ளது. நீர் வரத்தின் காரணமாக குந்தா, கெத்தை, மாயார், முக்குருத்தி உள்ளிட்ட அணை கள் வேகமாக நிரம்பி வருகின்றன. அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருவதை தொடர்ந்து கடந்த சில தினங்களாக பெரும்பாலன மின் நிலையங்களில் வழக்கத்தைவிட மின்சார உற்பத்தி அதிகரித்துள்ளதாக வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வேளாண் அதிகாரிகள் விளக்கம்

அன்னவாசல், : மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடிக்குத் தயாராகி வரும் விவசாயிகள் அனைவரும் விதையைப்பற்றி அறிந்து கொள்வது அவசியம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ஷாஜகான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இம்மழையினைப் பயன்படுத்தி நேரடி நெல் விதைப்பு செய்திட விவசாயிகள் தயாராகி வருகின்றனர். எனவே, சம்பா சாகுபடி தொடங்குமுன் விவசாயிகள் நல்விதை என்றால் எது? என்று அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஏனென்றால் தற்போது பெரும்பாலான விவசாயிகள் விதைகளை சான்று அட்டை இல்லாமல் அரசு உரிமம் பெறாத தனியார் நிறுவனங்களில் வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இதனால் விதைகள் சரியாக முளைக்காமல் முளைப்புத்திறன் குறைவாக இருக்கிறது. மேலும் விதைகளில் பிற ரகக் கலப்பு காணப்பட்டு வயல்களில் பயிர் வளர்ச்சி சீராக இல்லாமல் இருக்கும். விதை தரமாக இல்லையென்றால் நாம் எவ்வளவு உரமிட்டாலும், பூச்சிமருந்து பயன்படுத்தி னாலும் அது எந்தவித பலனையும் தராது. நல் விதை என்பது பாரம்பரியச் சுத்தம் உடையதாக இருக்க வேண்டும். அதிகபட்ச புறத்தூய்மை கொண்டதாக இருக்க வேண்டும். தேவையான முளைப்புத்திறன் கொண்டதாக இருக்க வேண்டும். அனுமதிக்கப்படும் ஈரத்தன்மை உடையதாக இருக்க வேண்டும். பூச்சி, நோய் தாக்குதல் இல்லாத விதையாக இருக்க வேண்டும். மேற்கண்டவாறு விதை இருந்தால்தான் அது ‘நல் விதை” ஆகும். நல் விதை குணங்கள் தமிழ்நாடு அரசு விதைச்சான்றுத் துறையினரால் வழங்கப்படும் சான்றுபெற்ற விதைகளில் கிடைக்கும். சான்று பெற்ற விதைகள் அரசு வேளாண் விரிவாக்க மையங்களிலும், தமிழ்நாடு அரசு விதைச்சான்றுத் துறையில் விதை விற்பனை உரிமம் பெற்ற

தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிலும் கிடைக்கும். எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு நெல் விதை வாங்கும்போது குறிப்பிடப்பட்ட கருத்துக்களை கவனத்தில் கொண்டு விதைகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

## நோய் தாக்காமல் நெற்பயிரை காக்க விதை நேர்த்தி செய்வது அவசியம் வேளாண் அதிகாரி அறிவுறுத்தல்

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள் விதையினைக் கடினப்படுத்தி, விதை நேர்த்தி செய்து விதைத்தால் நெற்பயிரை தாக்கும் நோய்களிலிருந்து பாதுகாக்கலாம் என புதுக்கோட்டை வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இம்மழையினைக் கொண்டு விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்திட தயாராகி வருகிறார்கள். குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி, ஏம்பல், திருவரங்குளம், கறம்பக்குடி, கந்தர்வகோட்டை வட்டாரங்களில் நேரடி நெல் விதைப்பு முறையில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. தற்போது பெய்து வரும் மழையினைப் பயன்படுத்தி 2, 3 முறை நன்கு உழவு செய்து வயலைத் தயார் செய்து வைத்துக்கொள்வது அவசியம். நேரடி நெல் விதைப்பிற்கு முன் விதைநேர்த்தி செய்து விதைக்க வேண்டும். விதைநேர்த்தி செய்து விதைப்பதால் விதை மூலம் பரவும் நோய்கள், குறிப்பாக குலைநோய், இலைப்புள்ளி நோய் மற்றும் பழநோய் ஆகியவை கட்டுப்படுத்தப்படுவதோடு விதை முளைக்கும் திறனும் அதிகமாகிறது. விதை நேர்த்திக்கு ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் வீதம் சூடோ மோனாஸ் புளோரசன்ஸ் என்ற உயிரியல் பூஞ்சான மருந்தினை ஒரு லிட்டர் நீரில் 12 மணிநேரம் ஊறவைத்து பின்பு ஈரச் சாக்குப் பையில் விதைகளை 24 மணிநேரம் வைத்திருந்தி முளைகட்டி விதைக்க வேண்டும். சூடோ மோனாஸ்

உயிரியல் பூஞ்சான மருந்து கிடைக்காத பட்சத்தில் ரசாயனப் பூஞ்சான விதை நேர்த்தி செய்யலாம். இதற்கு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கார்பன்டாசிம் அல்லது டிரைசைக்ளோசோல் என்ற பூஞ்சானக்கொல்லியினை 1 லிட்டர் தண்ணீ ரில் 10 மணிநேரம் ஊற வைத்து பின்பு தண்ணீரை வடிகட்டி 24 மணிநேரம் ஈரச் சாக்குப் பையில் வைத்து முளைகட்டி விதைக்க வேண்டும். விதையைத் தெரிவு செய்தற்கு நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள் நெல் விதைகளை சாதாரண உப்புக் கரைசலில், அதாவது ஒன்றரை கிலோ உப்பை 10 லிட்டர் நீரில் கரைத்து அதில் நெல் விதைகளை இட்டு மிதக்கும் விதைகளை நீக்கிவிட வேண்டும். அடியில் தங்கிய விதைகளை நல்ல தண்ணீரில் கழுவி நிழலில் உலர்த்த வேண்டும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட விதைகள் நல்ல முளைப்புத் திறனைக் கொடுக்கும். விதையைக் கடினப்படுத்துவதற்கு நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள் ஆரம்பத்தில் நிலவும் வறட்சியைத் தாங்கி வளர ஒரு சத பொட்டாசியம் குளோரைடு கரைசலைக் கொண்டு விதைகளைக் கடினப்படுத்த வேண்டும். இதற்கு 1 லிட்டர் தண்ணீரில் 10 கிராம் வீதம் மூரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினைக் கலந்து தேவையான கரைசல் தயார் செய்யவும். ஒரு கிலோ விதையினை 350 மி.லி. கரைசலில் 5 மணிநேரம் ஊறவைத்து பின்பு நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். எனவே சம்பா நேரடி நெல் விதைப்பு செய்யும் விவசாயிகள் விதையினைத் தெரிவு செய்து, கடினப்படுத்தி, விதை நேர்த்தி செய்து விதைத்தால் வறட்சியைத் தாங்கி வளர்வதோடு நெற்பயிரைத் தாக்கும் நோய்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளலாம் என புதுகை வேளாண் இணை இயக்குநர் ஷாஜஹான் தெரிவித்துள்ளார்.

## <u>தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க செயலர்களுக்கு பயிற்சி</u>

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் நபார்டு வங்கி சார்பில் புதுக் கோட்டை, பெரம்பலூர், திருச்சி, அரியலூர் போன்ற மாவட்டங்களில் உள்ள 42 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க செயலாளர்களுக்கு தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் பல தொழில் முனையங்களாக செயல்படுத்துவதற்கான ஒரு நாள்

பயிற்சி நடைபெற்றது. புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியில் நடந்த இப்பயிற்சிக்கு மாவட்ட கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் குமார் தலைமை வகித்து பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது: போட்டி நிலவும் இன்றைய சூழலில், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், தங்களுடைய உறுப்பினர்களுக்கு பல்வேறு சேவைகளை வழங்குவது மூலமே நிலைத்து நிற்க முடியும். இத்திட்டத்தின் கீழ் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தானியக்கிடங்குகள் மற்றும் மண், நீர்ப்பரிசோதனை கூடங்கள், விற்பனை மையங்களுடன் தொடர்பு ஏற்படுத்துதல் போன்ற பல சேவைகளை உறுப்பினர்களுக்கு அளிக்கலாம் என்றார். புதுக்கோட்டை மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண் இயக்குநர் பால்வடிவு பேசுகையில், தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தின் அனைத்து சேவைகளையும் ஒன்றாக்கி ஒரே இடத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்றும், வியாபார சந்தையில் பங்கு பெற வேண்டும் என்றார். திருச்சி மாவட்ட வரதராஜபுரம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்க செயலாளர் சரவணன், இத்திட்டத்தில் செயல்படுத்தி வரும் வாழைப்பழம் பழுக்க வைக்கும் குளிர்பதன கிடங்கு பற்றிய தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். நபார்டு வங்கியின் திருச்சி மாவட்ட வளர்ச்சி மேலாளர் சுரேஷ்குமார், இத்திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். முன்னதாக புதுகை மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் சோமசுந்தரம் பயிற்சிக்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் நபார்டு வங்கியின் பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சி மேலாளார் கோதண்டபானி, பார்த்திபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>வேளாண் அதிகாரிகள் விளக்கம்</u>

அன்னவாசல், : மாவட்டத்தில் சம்பா நெல் சாகுபடிக்குத் தயாராகி வரும் விவசாயிகள் அனைவரும் விதையைப்பற்றி அறிந்து கொள்வது அவசியம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மாவட்ட வேளாண் இணை

இயக்குநர் ஷாஜகான், குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத் துணை இயக்குநர் சாந்தி மற்றும் வேளாண் அலுவலர் ராஜசேகரன் ஆகியோர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்து வருகிறது. இம்மழையினைப் பயன்படுத்தி நேரடி நெல் விதைப்பு செய்திட விவசாயிகள் தயாராகி வருகின்றனர். எனவே, சம்பா சாகுபடி தொடங்குமுன் விவசாயிகள் நல்விதை என்றால் எது? என்று அறிந்து கொள்வது மிகவும் அவசியம். ஏனென்றால் தற்போது பெரும்பாலான விவசாயிகள் விதைகளை சான்று அட்டை இல்லாமல் அரசு உரிமம் பெறாத தனியார் நிறுவனங்களில் வாங்கிப் பயன்படுத்துகின்றனர். இதனால் விதைகள் சரியாக முளைக்காமல் முளைப்புத்திறன் குறைவாக இருக்கிறது. மேலும் விதைகளில் பிற ரகக் கலப்பு காணப்பட்டு வயல்களில் பயிர் வளர்ச்சி சீராக இல்லாமல் இருக்கும். விதை தரமாக இல்லையென்றால் நாம் எவ்வளவு உரமிட்டாலும், பூச்சிமருந்து பயன்படுத்தினாலும் அது எந்தவித பலனையும் தராது. நல் விதை என்பது பாரம்பரியச் சுத்தம் உடையதாக இருக்க வேண்டும். அதிகபட்ச புறத்தூய்மை கொண்டதாக இருக்க வேண்டும். தேவையான முளைப்புத்திறன் கொண்டதாக இருக்க வேண்டும். அனுமதிக்கப்படும் ஈரத்தன்மை உடையதாக இருக்க வேண்டும். பூச்சி, நோய் தாக்குதல் இல்லாத விதையாக இருக்க வேண்டும். மேற்கண்டவாறு விதை இருந்தால்தான் அது 'நல் விதை" ஆகும். நல் விதை குணங்கள் தமிழ்நாடு அரசு விதைச்சான்றுத் துறையினரால் வழங்கப்படும் சான்றுபெற்ற விதைகளில் கிடைக்கும். சான்று பெற்ற விதைகள் அரசு வேளாண் விரிவாக்க மையங்களிலும், தமிழ்நாடு அரசு விதைச்சான்றுத் துறையில் விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களிலும் கிடைக்கும். எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு நெல் விதை வாங்கும்போது குறிப்பிடப்பட்ட கருத்துக்களை கவனத்தில் கொண்டு

விதைகளைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் அதில் தெரிவித்துள்ளனர்.

**<u>பாசனத்துக்காக திறந்து விடப்பட்ட காவிரி நீர் மயிலாடுதுறை வந்தது 20 நாட்களுக்கு முறை வைக்காமல் திறக்க விவசாயிகள் கோரிக்கை</u>**

மயிலாடுதுறை, : பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர், நேற்று மயிலாடுதுறை வந்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சம்பா சாகுபடிக்காக மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று மயிலாடுதுறைக்கு வந்தது. மயிலாடுதுறை நகர் வழியே செல்லும் காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. காவிரி துலா கட்டத்தில் ஐப்பசி கடைசி தினத்தன்று முழுக்கு நடைபெறுவது வாடிக்கை. ஆற்றின் நடுவில் அமைந்துள்ள நந்தியை சுற்றி நீர் பெருக்கெடுத்து ஓடியது. பக்தர்கள் ஆற்றில் நீராடி மகிழ்ந்தனர். நிலத்தடி நீரைக்கொண்டு குறுவை சாகுபடி செய்யப்பட்ட இடங்களில், தற்போது அறுவடை நடைபெற்று வருகிறது. தாளடி விவசாயத்திற்கு விவசாயிகள் தயாராகி வரும் நிலையில் காவிரி நீர் மயிலாடுதுறைக்கு வந்திருப்பது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது. அதேபோல் ஆற்று நீரைக்கொண்டு சம்பா விவசாயம் செய்துவ ரும் விவசாயிகளும் நம்பிக்கையாக சம்பா சாகுபடிக்கான வேலை களை ஆரம்பித்துள்ளனர். நாகை மாவட்ட கடைமடை பாசன விவசாயிகள் சங்கத்தலைவர் அலக்சாண்டர் கூறுகையில், 'டெல்டா மாவட்டங்களில் கடந்த 3 வருடமாக குறுவை சாகுபடி கிடையாது. சம்பா சாகுபடிக்குத் தண்ணீர் வந்து விட்டது. 20 நாட்களுக்கு முறை வைக்காமல் தண்ணீர் விட்டால்தான் கடைமடை பகுதிக்கு நீர் சென்று சேறும். விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் சம்பா விதைகள், ஆடுதுறை 30, சி.ஆர்1009 பி.பி.டி. 5204, ஏ.டி.டி.46, சொர்ணசப் போன்ற ரகங் களை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க வேண்டும். 2 ஆண்டுகளாக உள்ள கூட்டுறவு கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் அல்லது நீண்டகால கடனாக

மாற்ற வேண்டும். இந்த ஆண்டு சம்பா சாகுபடி தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு கடன் வழங்க வேண்டும். தனியார் கடைகளில் விற்கும் விதை நெல்களை விதைச்சான்று அலுவலர்கள் முறையாக ஆய்வு செய்ய வேண்டும். தமிழக அரசு குறுவை சாகுபடி திட்டம், சம்பா சாகுபடி சிறப்பு திட்டம் என்று வழங்கும் இலவச பொருட்களான நுண்ணு யிர் உரங்கள், நாற்று நடவு எந்திரம், தண்ணீர் குழாய்கள், களைபறிக்கும் எந்திரம் விவசாயிகளுக்கு கிடைக்கவில்லை. ஆளுங்கட்சியினரே பெற்றுள்ளனர். இதுகுறித்து நாகை மாவட்ட நிர்வாகம் உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## மாவட்டத்தில் பரவலாக மழை

விருதுநகர், : விருதுநகர் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் வெப்பம் தணிந்து மாவட்டத்தில் குளிர்ச்சி நிலவி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து விட்ட நிலையில் தற்போது மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விபரம். (மி.மீடடரில்) விருதுநகர் - 92, காரியாபட்டி - 16, வெம்பக்கோட்டை - 57, சிவகாசி - 6.40, சாத்தூர் - 13 மழை பதிவாகியுள்ளது.

## சிவகாசியில் 75 மி.மீ மழை பதிவு

விருதுநகர், : விருதுநகர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை பரவ லாக மழை பெய்தது. நேற்று காலை 6 மணி வரை பதிவான மழையளவு மி.மீ வரு மாறு:- அருப்புக்கோட்டை 14, சாத்தூர் 2, திருவில்லிபுத்தூர் 6, சிவகாசி 75, காரியாபட்டி 2.2, வெம்பக்கோட்டை 43.2, கோவிலா ங்குளம் 7 மி.மீ மழை பதிவாகி உள்ளது. விருதுநகரில் நேற்று மதியம் 2.50 மணி முதல் 3.15 மணி வரை மழை பெய்தது.

## சாத்தூரில் இடியுடன் கனமழை

சாத்தூர், : சாத்தூரில் நேற்றுமாலை இடியுடன் கனமழை பெய்ததால் பொது மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விருதுநகர் மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்து விட்டதால் விவசாய நிலங்கள், நீர்ப்பிடிப்பு பகுதிகள் வறண்ட நிலையில் காணப்படுகிறது. மழை இல்லாததால் நிலத்தடி நீர்மட்டம் குறை ந்து சாத் தூர் மற்றும் சுற்று ப்புற கிராமங்களில் கடும் குடிநீர் தட்டுப் பாடு நிலவி யது. இந்த ஆண்டு பருவமழையை எதிர்பார்த்து பொதுமக்கள் காத்திருந்தனர். கடந்த நான்கு நாட்களாக சாத்தூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட் டது. இந்நிலையில் சாத் தூரில் நேற்று மாலை சுமார் ஒரு மணி நேரம் இடியுடன் கன மழை பெய்தது. இதனால் சாலை களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தேசிய நெடுஞ்சாலையில் வாறுகால் மராமத்து செய்யப்படாததால் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. மழை காரணமாக சாலையில் இருள் சூழந்து காணப்பட்டதால் வாகனங்கள் முகப்புவிளக்கை எரிய விட்டு சென்றன. நேற்றுமாலை சுமார் 3மணிக்கு தொடங்கி 4மணிவரை மழை பெய்தது.

## புடலங்காய் வரத்து அதிகரித்தது

சேலம், : சேலம் மார்க்கெட்டுகளுக்கு வரும் புடலங்காயின் வரத்து அதிகரித்துள்ளது. திருச்சி மாவட்டம் தொட்டியம், முசிறி, துறையூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலிருந்து குட்டை ரக புடலங்காய்களும், சேலம் மாவட்டத்தின் தலைவாசல், ஓமலூர், பனமரத்துப்பட்டி, தாரமங்கலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நீள ரக புடலங்காய்களும் சேலம் மார்க்கெட்டு களுக்கு விற்பனைக்கு வருகிறது. சென்ற வாரத்தில் தினமும் 400 கிலோ வரை இருந்த புடலங்காயின் வரத்து தற்போது 600 கிலோவாக அதிகரித்துள்ளது. இதனால் விலையும் கடந்த வாரத்தை காட்டிலும் சற்று குறைந்துள்ளது. ஒரு கிலோ ரூ 23 ஆக விற்பனை செய்யப்பட்டு வந்த புடலங்காய், தற்போது ஒரு கிலோ ரூ 18 ஆக குறைந்துள்ளது.இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறும்போது, ‘சென்ற வாரத்தை காட்டிலும் தற்போது புடலங்காய் வரத்து அதிகரித்துள்ளது. எனினும் மற்ற காய்கறிகளின் விலையும் குறைந்துள்ளதால் புடலங்காயின் விற்பனை

சுமாராகவே உள்ளது. வரும் விஷேச நாட்களில் அதன் விற்பனை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

## <u>விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்</u>

திருவள்ளூர், : திருவள்ளூர் கலெக்டர் வீரராகவராவ் வெளியிட்டுள்ள அறிக்கை: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நாளை (22ம் தேதி) காலை 11 மணிக்கு நடக்கிறது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகிக்கிறார். இதில் வேளாண்மைத்துறை, தோட்டக் கலைத்துறை, வருவாய்த்துறை, மின்வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப் பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வுகாண உள்ளனர். எனவே, மாவட்ட விவசாயிகள் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## <u>மாவட்டத்தில் பலத்த மழை எதிரொலி அணைகளில் நீர் மட்டம் உயர்வு</u>

மஞ்சூர், : நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பெய்த பலத்த மழையால் நீலகிரி மாவட்ட அணைகளில் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால் மின்சார உற்பத்தியும் அதிகரித்துள்ளது. நீலகிரியில் குந்தா, பைக்காரா நீர் மின் திட்டங்களின் கீழ் 12 நீர் மின்நிலையங்கள் இயங்குகின்றன. பல்வேறு அணைகளில் தேக்கி வைக்கப்படும் நீரின் மூலம் இந்த மின் நிலையங்கள் இயக்கப்படுகின்றன. இதில் குந்தா மின் நிலையத்தில் 60 மெகாவாட், கெத்தை மின் நிலையத்தில் 175 மெகாவாட், பரளி மின் நிலையத்தில் 180 மெகாவாட், பில்லுா்ர் மின் நிலையத்தில் 100 மெகாவாட், அவலாஞ்சி மின் நிலையத்தில் 40 மெகாவாட், காட்டுகுப்பை மின் நிலையத்தில் 30 மெகாவாட், சிங்காரா புஷ்ஷப் மின் நிலையத்தில் 150 மெகாவாட், பைக்காரா மின் நிலையத்தில் 59.2 மெகாவாட், பைக்காரா மைக்ரோ மின் நிலையத்தில் 2 மெகாவாட், முக்குறுத்தி மினி மைக்ரோ மின் நிலையத்தில் 0.70 மெகாவாட், மோயார் மின் நிலையத்தில் 36

மெகாவாட் மற்றும் மரவகண்டி மின் நிலையத்தில் 0.75 மெகாவாட் மின்சாரம் என மாவட்டத்தில் உள்ள மின் நிலையங்கள் மூலம் மொத்தம் 833.65 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தமிழக மொத்த மின் உற்பத்தியில் 10 சதவீதம் மின் உற்பத்தி இந்த மின்நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மின்சார உற்பத்திக்கு பின் மின் நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. மேலும் கோவை, ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய பவானி பாசன பகுதிகளின் விவசாய தேவைகளுக்கும் முக்கிய நீராதாரமாக உள்ளது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக நீலகிரியில் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக அணை கட்டுகள் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வரு கிறது. பல்வேறு இடங்களிலும் கன மழையினால் புதிய நீர் வீழ்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் நீர் வரத்து அதிகரித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் நீர் மட்டம் பெருமளவு உயர்ந்துள்ளது. நீர் வரத்தின் காரணமாக குந்தா, கெத்தை, மாயார், முக்குருத்தி உள்ளிட்ட அணை கள் வேகமாக நிரம்பி வருகின்றன. அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருவதை தொடர்ந்து கடந்த சில தினங்களாக பெரும்பால £ன மின் நிலையங்களில் வழக்கத்தைவிட மின்சார உற்பத்தி அதிகரித்துள்ளதாக வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>மழையால் பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து மீண்டும் அதிகரித்தது</u>

ஈரோடு, : நீலகிரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பவானிசாகர் அணைக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக ஆற்றின் வழியே பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு குறைக்கப் பட்டுள்ளது. 105 அடி கொள்ளளவு கொண்ட பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நேற்று 76.13 அடியாகவும், நீர்வரத்து 3543 கனஅடியாகவும் இருந்தது. 2 நாட்களுக்கு முன்பு அணையின் நீர்பிடிப்பு பகுதிகளான நீலகிரி மாவட்டத்தில் மழை குறைந்து போனதால் நீர்வரத்து 1100 முதல் 1300 கனஅடியாக குறைந்து போனது. இதனால் நீர்மட்டம் வேகமாக சரிவடையும் அபாயம் ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையடைந்தனர். இந்நிலையில் கடந்த 2 நாட்களாக நீலகிரி

மாவட்டத்தில் பெய்து வரும் கனமழையால் நீர்வரத்து நேற்று காலை 3543 கனஅடியாக அதிகரித்து காணப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில் மட்டுமின்றி கடந்த 3 நாட்களாக ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாக இலேசான சாரல் மழை பெய்து வருவதால் அணையிலிருந்து பாசனத்துக்கு திறந்து விடப்படும் நீரின் அளவும் நேற்று குறைக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் அணையிலிருந்து காலிங்கராயன் மற்றும் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்காகவும் ஆற்றின் வழியாக 1050 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் 2300 கனஅடி நீரும் திறந்து விடப்பட்டிருந்தது. இந்நிலையில் கடந்த 3 நாட்களாக பெய்து வரும் பரவலான மழையால் நேற்று ஆற்றின் வழியே 600 கனஅடியாகவும், கீழ்பவானி வாய்க்காலில் 2200 கனஅடியாகவும் நீர்திறப்பு குறைக்கப்பட்டது. தொடர்ந்து நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருவது விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**மாவட்டம் முழுவதும் 3வது நாளாக பலத்த மழை பெய்தது சத்தியில் அதிகபட்சம் 96.4 மி.மீ. பதிவு**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் நேற்று 3வது நாளாக பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் அதிகபட்சமாக சத்தியமங்கலத்தில் 96.4 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. வங்க கடல் பகுதியில் வளிமண்டல மேல் அடுக்கில் ஏற்பட்டுள்ள காற்று சுழற்சியின் காரணமாக தமிழகம் மற்றும் புதுவையில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இரண்டு நாட்களாக லேசாக பெய்து வந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை மாவட்டம் முழுவதும் பலத்த மழை கொட்டியது. இதனால் மழைநீர் சாலைகளில் பெருக் கெடுத்து ஓடியது. நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில் அதிகபட்சமாக சத்தியமங்கலத்தில் 96.4 மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது. கொடிவேரி 46, கோபி 10, எலந்தைகுட்டைமேடு 3, கவுந்தப்பாடி 5.4, பெருந்துறை 6, பவானி 12.4, புங்கம்பாடி 3, ஓலப்பாளையம் 8, ஈரோடு 9, அரச்சலூர் 58, சென்னிமலை 15, பவானிசாகர் 83.2, சிவகிரி 5, மங்களபட்டி 10, கொடுமுடி 10.4, ஒரத்துப்பாளையம் 11 மில்லிமீட்டர் மழை பதிவாகி இருந்தது. மழை காரணமாக பவானிசாகர்

அணைக்கு வரும் தண்ணீரின் வரத்து அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 76.13 அடியாகவும், அணைக்கான நீர்வரத்து 3543 கன அடியாகவும் இருந்தது. பாசனத்திற்கு அணையில் இருந்து ஆற்றில் 1050 கனஅடியும், வாய்க்காலில் 2300 கனஅடி தண்ணீரும் திறந்துவிடப்பட்டுள்ளது.

## கீழ்பவானி பாசன பிரிவு வாய்க்கால் கரையை ரூ.4 லட்சத்தில் விவசாயிகளே பலப்படுத்தினர்

கோபி, : கோபி அருகே உள்ள கொளத்துப்பாளையம் பிரிவு வாய்க்கால் மூலம் 950 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த வாய்க்காலின் 8வது மதகிலிருந்து 12வது மதகு வரை வாய்க்கால் கரை குறுகலாக இருந்ததால் அந்த பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை கொண்டு செல்ல வழியில்லாத நிலை இருந்து வந்தது. குறிப்பாக கரும்பு, மரவள்ளி, மஞ்சள், வாழை போன்ற பொருட்கள் தலைச்சுமையாக கொண்டு வந்த பின்னரே வாகனங்களில் ஏற்றி விற்பனைக்கு கொண்டு செல்ல வேண்டி இருந்தது. அதனால் வாய்க்கால் கரையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி கரையை அகலப்படுத்த விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர். அதைத்தொடர்ந்து பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திருமூர்த்தி, கூட்டமைப்பு இணைச்செயலாளர் வெங்கடாசலபதி, கமிட்டி தலைவர் செங்கோட்டையன் உள்ளிட்ட குழுவினர் குறிப்பிட்ட பகுதியில் ஆய்வு செய்தனர். அதைத்தொடர்ந்து பொதுப்பணித்துறை மற்றும் வருவாய்த்துறையினர் அந்த பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றினர். அதைத்தொடர்ந்து ரூ.4 லட்சம் மதிப்பீட்டில் விவசாயிகள் சொந்த செலவில் 2 கிலோ மீட்டர் துரத்திற்கு 20 அடி அகல கரையாக மாற்றினர். பொதுப்பணித்துறையினரிடம் பலமுறை கோரிக்கை வைத்தும் பயனில்லாத நிலையில் விவசாயிகளே சொந்த செலவில் கரையை அகலப்படுத்தியது ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கு முன்னுதாரணமாக உள்ளது.

**<u>அவல்பூந்துறை ஒழுங்குமுறை கூடத்தில் கொப்பரை, தேங்காய், நிலக்கடலை ரூ.1 கோடியே 5 லட்சத்துக்கு ஏலம்</u>**

மொடக்குறிச்சி,: அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய், கொப்பரை மற்றும் நிலக்கடலை ரூ.1 கோடியே 5 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கொப்பரை தேங்காய் ஏலத்திற்கு 1,957 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. இதில் முதல் தரம் கொப்பரை கிலோ ரூ.199.15 முதல் 112.85 வரையும் இரண்டாம் தரம் கிலோ ரூ.96.55 முதல் 198 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது. இதன் மொத்த மதிப்பு 99 லட்சத்து 75 ஆயிரம் வரை விற்பனை செய்யப்பட்டது. கொப்பரைத் தேங்காய் ஏலத்தில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து 267 விவசாயிகள் கலந்து கொண்டனர். அதேபோல 38 ஆயிரத்து 883 தேங்காய்கள் விற்பனைக்கு வந்திருந்தது. இதில் தேங்காய் ஒன்று ரூ.4.25 முதல் 14.35 வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.4 லட்சத்து 53 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.90 மூட்டை நிலக்கடலை ஏலம் விடப்பட்டது. இதில் குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக 4 ஆயிரத்து 609 ரூபாயும், குறைந்தபட்சம் 3 ஆயிரத்து 529 ரூபாயும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 24 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டது.மேலும் வரும் 15ம் தேதி வெள்ளிக்கிழமை சுதந்திர தினம் என்பதால் அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்ப னை கூடத்திற்கு விடுமுறை அளி'கப்பட்டுள்ளதாக விற்பனைக் கூட கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

**<u>மாவட்டத்தில் பலத்த மழை எதிரொலி அணைகளில் நீர் மட்டம் உயர்வு</u>**

மஞ்சூர், : நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பெய்த பலத்த மழையால் நீலகிரி மாவட்ட அணைகளில் நீர் மட்டம் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. இதனால் மின்சார உற்பத்தியும் அதிகரித்துள்ளது. நீலகிரியில் குந்தா, பைக்காரா நீர் மின் திட்டங்களின் கீழ் 12 நீர் மின்நிலையங்கள் இயங்குகின்றன. பல்வேறு அணைகளில் தேக்கி வைக்கப்படும் நீரின் மூலம் இந்த மின் நிலையங்கள் இயக்கப்படுகின்றன. இதில் குந்தா மின் நிலையத்தில் 60 மெகாவாட், கெத்தை

மின் நிலையத்தில் 175 மெகாவாட், பரளி மின் நிலையத்தில் 180 மெகாவாட், பில்லூர் மின் நிலையத்தில் 100 மெகாவாட், அவலாஞ்சி மின் நிலையத்தில் 40 மெகாவாட், காட்டுகுப்பை மின் நிலையத்தில் 30 மெகாவாட், சிங்காரா புஷ்ஷப் மின் நிலையத்தில் 150 மெகாவாட், பைக்காரா மின் நிலையத்தில் 59.2 மெகாவாட், பைக்காரா மைக்ரோ மின் நிலையத்தில் 2 மெகாவாட், முக்குறுத்தி மினி மைக்ரோ மின் நிலையத்தில் 0.70 மெகாவாட், மோயார் மின் நிலையத்தில் 36 மெகாவாட் மற்றும் மரவகண்டி மின் நிலையத்தில் 0.75 மெகாவாட் மின்சாரம் என மாவட்டத்தில் உள்ள மின் நிலையங்கள் மூலம் மொத்தம் 833.65 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தமிழக மொத்த மின் உற்பத்தியில் 10 சதவீதம் மின் உற்பத்தி இந்த மின்நிலையங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மின்சார உற்பத்திக்கு பின் மின் நிலையங்களில் இருந்து வெளியேற்றப்படும் நீர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து வருகிறது. மேலும் கோவை, ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய பவானி பாசன பகுதிகளின் விவசாய தேவைகளுக்கும் முக்கிய நீராதாரமாக உள்ளது. இந்நிலையில், கடந்த சில தினங்களாக நீலகிரியில் பலத்த மழை பெய்து வருகிறது. குறிப்பாக அணை கட்டுகள் மற்றும் நீர் பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வரு கிறது. பல்வேறு இடங்களிலும் கன மழையினால் புதிய நீர் வீழ்ச்சிகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் நீர் வரத்து அதிகரித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து அணைகளிலும் நீர் மட்டம் பெருமளவு உயர்ந்துள்ளது. நீர் வரத்தின் காரணமாக குந்தா, கெத்தை, மாயார், முக்குருத்தி உள்ளிட்ட அணை கள் வேகமாக நிரம்பி வருகின்றன. அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருவதை தொடர்ந்து கடந்த சில தினங்களாக பெரும்பால £ன மின் நிலையங்களில் வழக்கத்தைவிட மின்சார உற்பத்தி அதிகரித்துள்ளதாக வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>செட்டிக்குளம் வணிகவளாகத்தில் 12 டன் சின்ன வெங்காயம் ஜ.1.70 லட்சத்திற்கு ஏலம்</u>

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் 12 மெட்ரிக் டன் சின்ன வெங்காயம் ரூ.1.70 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டது என கலெக்டர்

தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக் குளத்திலுள்ள வெங்காய வணிக வளாகத்தில் நேற்று திறந்தமுறை ஏலம் நடைபெற்றது. செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், பெருமத்தூர், இரூர், ஆலத்தூர், சத்திரமனை, பொம்மனப்பாடி மருதடி ஆகியக் கிராமங்களைச் சேர்ந்த 46 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத் தினை திறந்தமுறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். செட்டிகுளம் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த 10 வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்திருந்த 257மூட்டை, அதாவது 12,037 கிலோ எடை கொண்ட சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் ஏலத்தில் எடுத்தனர். இந்த ஏலத்தில் பழைய பட்டறை வெங்காயம் அதிகப்பட்சமாக ரூ.21க்கும் புதிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிக பட்சமாக ரூ.25.50க்கும், சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ. 14க்கும் விலை கிடைத்தது. இதன் மூலம் ரூ.1,70,252க்கு விற்பனை நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வெங்காய மார்க்கெட்டில் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஏலம் நடைபெறுவதால் ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் போன்ற வெளிமாவட்ட வியாபாரிகள் செட்டிகுளம் வணிக வளாகத்தில் நடத்தப்படும் திங்கட்கிழமை ஏலத்தில் கலந்து கொள்ள இயலாத நிலையுள்ளது. எனவே வெளி மாவட்ட வியாபாரிகள் செட்டிக்குளம் வணிகவளாகத்தில் ஏலத்தில் கலந்து கொள்ள ஏதுவாக இனிவரும் காலங்களில் திங்கட்கிழமைக்கு பதிலாக செவ்வாய் கிழமைகளில் ஏலம் நடைபெறும். மேலும் வியாழக்கிழமைகளில் வழக்கம்போல ஏலம் நடைபெறும். எனவே வருகிற 21ம்தேதி செட்டிகுளம் வணிக வளாகத்தில் நடைபெறும ஏலத்தை வெங்காய விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். சுத்தமான மற்றும் தரமான விளைபொரு ளுக்கு அதிகவிலை கிடைப்பது இயல்பு. எனவே விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை நன்கு தூற்றி தூசி, சருகு ஆகியவற்றை நீக்கி, சுத்தப்படுத்தி, சுத்தமான வெங்காயத்தினை கொண்டுவர வேண்டுமென கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள் என தெரிவித்துள்ளார்.

## சம்பா சாகுபடி அதிக மகசூல் முனைப்பு முகாம்

அரியலூர்,: அரியலூர் மாவட்டம் தா.பழூரை அடுத்த தாதம்பேட்டையில் தா.பழூர் வட்டார வேளாண்துறை சார்பில் சம்பா சாகுபடியில் அதிக மகசூல் பெறு வதற்கான முனைப்பு முகாம் நடைபெற்றது. முகாமினை விவசாய சங்கத்தலைவர் நாகரத்தினம் துவக்கி வைத்தார். தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி நடப்பு சம்பா சாகுபடியில் பயிரிடும் விவசாயிகள் விதைநேர்த்தி குறித்து செயல் விளக்கமளித்தார். வேளாண் அலுவலர் சுகந்தி சம்பா சாகுபடியில் நெற்பயிரில் ஏற்படக்கூடிய நோய் தாக்குதல் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜாஜோஸ்லின், துணை வேளாண் அலுவலர் ரவிச்சந்திரன் ஆகியோர் பேசினர்.

## அரும்பாவூர் பகுதியில் விதைப்பு பணியில் விவசாயிகள் தீவிரம்

அரும்பாவூர்,: அரும்பாவூர் மற்றும் சுற்று பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்துவரும் பலத்த மழையால் ஆடிப்பட்ட விதைப்பு பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அரும்பாவூர், பூலாம்பாடி, தழுதாழை, தொண்ட மாந்துறை, பெரியம்மாபாளையம், வெங்கலம் கிருஷ்ணாபுரம் உள்பட வேப்பந் தட்டை தாலுகாவில் பல்வேறு பகுதிகளில் கடந்த ஒன்றரை மாதமாக சரிவர மழை பெய்யவில்லை. மானாவாரி நிலங்களில் ஒவ்வொரு வருடமும் ஆடிப்பட்டத்தில் விவசாயிகள் பருத்தி, மக்காசோளம் உள்ளிட்ட பயிர்களை விதைப்பு செய்வது வழக்கம். ஆடி மாதம் முடியும் தருவாயிலும் மழை இல்லாததால் விவசாயிகள் மிகுந்த அச்சத்தில் இருந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக வேப்பந் தட்டை பகுதிகளில் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மானாவாரி விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது பெய்யும் கோடை மழையை பயன்படுத்தி விவசாயிகள் விதைப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகள் மானாவாரி நிலத்தில் பருத்தி மற்றும் மக்காச்சோளம் ஆகியவற்றை அதிக அளவில் விதைப்பு செய்து வருகின்றனர். கடும் தண்ணீர்

பற்றாக்குறை நிலவி வந்த நிலையில் தற்போது பெய்த மழை விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது.

**<u>அரியலூர் மாவட்டத்தில் அதிக விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை கலெக்டர் எச்சரிக்கை</u>**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் பட்டியல் இன்றி விற்பனை செய்யும் உரக்கடைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என கலெக்டர் சரவணவேல்ராஜ் எச்சரித்துள்ளனர். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி 30 ஆயிரம் ஏக்கரில் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு சம்பா சாகுபடிக்கு போதுமான உரங்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள் மற்றும் விதைகள் தனியார் மற்றும் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில் உற்பத்தியாளர்களிடம் இருந்து தருவித்து போதுமான அளவு இருப்பு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதர இடுபொருட்கள் விநியோகத்தை கண்காணிக்க, அரியலூர் மாவட்ட நிர்வாகத்தின் ஆணையின்படி 6 குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, அரியலூர் வட்டாரத் திலுள்ள உரக் கடைகளை வேளாண் உதவி இயக்குர் முரளிதரன், ஆண்டிமடம் வேளாண் உதவி இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் மோகன் ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985ன்படி அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து உரம் மொத்தம் மற்றும் சில்லரை விற்பனையாளர்கள் அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் விற்பனை செய்யக் கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறது. மேலும் மாவட்டத்திலுள்ள மொத்த உர விற்பனை நிலையம் 157 உள்ளது. இதில் தனியார் உர விற்பனை நிலையம் 93 மற்றும் கூட்டுறவு துறையில் உர விற்பனை நிலையம் 64 உள்ளது. சம்பா சாகுபடி செய்யும் விவசாயிகள் பயன் பெறும் வகையில் உர விற்பனையாளர்கள் உர இருப்பு மற்றும் உர விற்பனை விபரம் குறித்து விளம்பரபலகை எழுதி தவறாது செயல்படுத்த வேண்டும். அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955 மற்றும் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985ன் படி உரங்கள் பதுக்கச் செய்யவதோ, பட்டியல் இன்றி விற்பனை செய்வதோ தடை செய்யப்பட்டுள்ளது. மீறும் உரக்கடைகள் மீது உரிய நடவடிக்கை

மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் அனைவரும் தாங்கள் வாங்கும் உரங்களுக்கு பட்டியல் கேட்டு பெற்றும், உர மூட்டைகளில் குறித்த விலையை விட அதிகபட்ச விலையில் விற்பனை செய்தால் உர விற்பனையாளர்கள் மற்றும் உரிமையாளர்களின் குறித்த வேளாண்மை உதவி இயக்குநர் (அலைபேசிஎண் 9655246347), மற்றும் வேளாண் அலுவலர் (9944346702) ஆகியோரிடம் நேரடியாக தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

**<u>மாவட்டத்தில் தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 37.40மிமீ மழை பெய்தது. தொடரும் மழையால் பருத்தி, மக்காச்சோள, வெங்காய விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை பருவம் தப் பிப் பெய்ததாலும், வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனதாலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து, வேளாண் சாகுபடி கேள்விக் குறியானது. இந்நிலையில் இந்த ஆண் டும் தொடக்கத்திலிருந்தே மழை பெய்யாமல் விவசாயிகளை ஏமாற்றி வந்தது. குறிப் பாக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சொட்டு மழைநீர்கூட பெய்யவில்லை. மார்ச், ஏப்ரல் மாதங்களிலும் போதுமான மழை பெய்யவில்லை. இந்நிலையில் ஜுன் மாதத்தில் குறிப்பிட்ட அளவு மழை பெய்தது. இது விவசாயத்திற்குப் போதுமானதாக இல்லை. குறிப்பாக ஆடிப்பட்டத்தை நம்பி வயலை உழுது விதைப்புக்கான மழை யை நம்பி காத்திருந்த விவசாயிகள் எதிர்பார்த்தபடி ஆடிமாதம் முடியும் வரை மழை பெய்யவில்லை. ஆடிமாதம் முடிவடைந்த பிறகு கடந்த 16,17 ஆகிய தினங்களில் பெரம்பலூர் மாவட்டத்தில் பரவலாக தொடர்மழை பெய்து வருகிறது. கடந்த 18ம்தேதி பெரம்பலூ ரில் 51மிமீ, செட்டிக்குளத்தில் 30மிமீ, பாடாலூரில் 83மிமீ, வேப்பந்தட்டையில் 14மிமீ, தழுதாழையில் 9மிமீ மழைபதிவானது. மாவட்ட அளவில் மிக அதிப்படியாக பாடாலூரில் 83மிமீ மழையும், மிகக்குறைவாக தழுதாழையில் 9மிமீ மழையும் பதிவாகியுள்ளது. மாவட்டஅளவில் மொத்தம் 187மிமீ மழையும், சராசரியாக 37.40மிமீ மழையும் பதிவாகியுள்ளது. இதனால் தமிழகத்திலேயே அதிகப்படியாக பெரம்பலூர் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் சின்னவெங்காயம், மக்காச்சோளம், பருத்தி விவசாயிகள்

மகிழ்ச்சியடைந்து விதைப்புப் பணிகளைத் தொடங்கியுள்ளனர். இதனால் விதைகள், உரங்கள், இடுபொருட்களின் தேவை அதிகரித்துள்ளது. குறிப்பாக தேவைப்படும் உரங்களுக்காகவும், தரமான விதைகளுக்காகவும் விவசாயிகள் நீண்ட நாட்களுக்குப்பிறகு விதைப் பண்ணைகளையும், உரக்கடைகளையும், வேளாண்துறை அலுவலகங்களையும் நாடிச்செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.


**சம்பா சாகுபடியில் மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி அவசியம் விவசாயிகளுக்கு யோசனை**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி முறை அவசியம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது சம்பா சாகுபடிக்கான முன்னேற்பாடு நடந்து வருகிறது. இந்த வேளையில் நெல் சாகுபடியில் அதிக மகசூலை தரக்கூடிய திருந்திய நெல் சாகுபடி என்ற ஒற்றை நாற்று நடவு முறைக்கு இளம்நாற்றுக்களை தயார் செய்வது முக்கியமான தொழில்நுட்பமாகும். பாய் நாற்றங்கால் முறை: 14 நாட்களில் வாளிப்பான நாற்றுக்களை பெற திருத்தியமைக்கப்பட்ட பாய் நாற்றங்கால் அமைக்க வேண்டும். இதற்கு நல்ல வடிகால் வசதியுடன் நீர் ஆதாரத்துக்கு அருகில் நாற்றங்காலை அமைக்க வேண்டும். ஒரு ஏக்கர் நடவு செய்ய தேவையான 2 கிலோ விதையை 40 சதுரமீட்டர் பரப்பு நாற்றங்காலில் விதைக்க வேண்டும். அதற்கு முன்னதாக 1 மீட்டர் அகலம் 40 மீட்டர் நீளம், 5 சென்டிமீட்டர் உயரம் கொண்ட மேட்டு பாத்திகளை அமைத்து பாத்தியின் மேல் பாலித்தீன் விரிப்பை விரிக்க வேண்டும். நீளம் மற்றும் அகலம் வாக்கில் 4 கட்டங்களாக பிரித்து 1 மீட்டர் நீளம், 0.5 மீட்டர் அகலம், 4 சென்டிமீட்டர் உயரம் கொண்ட மரத்திலான விதைப்பு சட்டத்தை தயார் செய்து அதை பாலித்தீன் விரிப்புக்குமேல் சரியாக சமன்பட வைக்க வேண்டும். ஒரு கிலோ வளமான மண்ணு டன் அரை கிலோ நன்கு பொடியாக்கிய டிஏபி உரத்தை சேர்த்து விதைப்பு சட்டத்துக்குள் முக்கால் அளவிற்கு நிரப்ப வேண்டும். விதை நேர்த்தி: விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் மற்றும் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரம் தலா ஒரு பாக்கெட் (200 கிராம்) என்ற அளவில் பயன்படுத்த வேண்டும். சூடோமோனாஸ்,

அசோஸ்பைரில்லத்தை தேவையான அளவு அரிசிக்கஞ்சி அல்லது தண்ணீரில் கரைத்து பின் அவற்றை விதைகளுடன் நன்றாக கலந்து நிழலில் உலர்த்த வேண்டும். நிழலில் உலர்த் திய விதைகளை தண்ணீரில் ஊறவைத்து வடிகட்டி பின் 24 மணி நேரம் முளை கட்ட வேண்டும். விதைத்தல்: விதையை முளை கட்டியபின் பரவ லாக விதைக்க வேண்டும். பின்னர் பூவாளியால் அடி வரை நனையும் அளவுக்கு தண்ணீர் தெளிக்க வேண்டும். விதையை விதைத்த பின் தென்னை ஓலை அல்லது வைக்கோலை கொண்டு விதைத்த பாத்திகளை மூடிவிட்டு 8 நாள் கழித்து தென்னை ஓலை அல்லது வைக்கோலை நீக்க வேண்டும். நீர்பாசனம்: முதல் 5 நாட்கள் வரை பூவாளியால் தண்ணீர் தெளித்த பின் பாத்திகள் நனையும் வகையில் தண்ணீர் கட்ட வேண்டும். விதைத்த 9வது நாள் 0.5 சத யூரியா கரைசலை பூவாளி மூலம் மாலை வேளையில் தெளிக்க வேண்டும். சரியாக 14வது நாளில் 12 முதல் 16 சென்டிமீட்டர் உயரமுடைய 2 இலை கொண்ட வாளிப்பான இளம்நாற்றுகள் நடவுக்கு தயாராக இருக்கும். இவற்றை குத்துக்கு ஒரு நாற்று வீதம் முக்கால் அடிக்கு முக்கால் அடி இடைவெளி விட்டு நடவு வயலில் நடவு மேற்கொள்ள வேண்டும். விவசாயத்துக்கு மேற்கண்ட மேட்டுபாத்தி நாற்றங்கால் தொழில்நுட்பங்களை பின்பற்றி அதிகளவு மகசூலை பெறலாம். இவ்வாறு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>குடகனாறு அணையில் ஒரே நாளில் 6 அடி நீர்மட்டம் உயர்வு</u>



வேடசந்தூர் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக குடகனாறு அணையில் ஒரே நாளில் 6 அடி நீர்மட்டம் உயர்ந்தது. பலத்த மழை திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் மற்றும் அதனைச்சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டு வந்தன. மேலும் கடுமையான வறட்சி நிலவி வந்ததால் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டு வந்தது. அழகாபுரி குடகனாறு அணையும் வறண்டு விட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலையில் வேடசந்தூர், அழகாபுரி, எரியோடு, கோவிலூர், கல்வார்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமப்பகுதியில் 1 மணி நேரத்திற்கும் மேலாக பலத்த மழை பெய்தது. அழகாபுரி பகுதியில் அதிகபட்சமாக 150 மி.மீ. மழை பதிவானது. வேடசந்தூர் தாலுகா அலுவலகத்தில் 92.04 மி.மீ மழையும், மத்திய புகையிலை ஆராய்ச்சி நிலையத்தில் 121.02 மி.மீ மழையும் பதிவாகியுள்ளது.

6அடிநீர்மட்டம்உயர்வு

இதனால் அணைக்கு அதிக அளவு நீர்வரத்து இருந்தது. ஒரே நாளில் அணையின்

மொத்த கொள்ளளவான 27 அடியில் தற்போது 6 அடிநீர் உள்ளது. ஒரே நாளில் மட்டும் 6 அடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் அழகாபுரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள குளங்களுக்கு மழைநீர் அதிகளவில் சென்று தேங்கியுள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் அணை விரைவில் நிரம்பும், விவசாய பணிகளும் நடக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மதகில் பழுது அழகாபுரி குடகனாறு அணையில் பழைய மதகுகளில் முதலாவது மதகில் லேசாக கசிவு ஏற்பட்டு தண்ணீர் வெளியேறி வருகிறது. அதிக அளவில் மழை பெய்து அணைக்கு வெள்ளநீர் வரும்போது மதகில் உடைப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் அணையின் பாதுகாப்பு கருதி முதலாவது மதகை உடனடியாக பழுது பார்க்க வேண்டும் என்று என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். தற்போது தண்ணீர் கசிவு ஏற்பட்டுள்ள இதே மதகில்தான் கடந்த 2007-ம் ஆண்டில் லேசான கசிவு ஏற்பட்டு பின்னர் அது உடைந்து அணைநீர் முழுவதும் வெளியேறியது குறிப்பிடத்தக்கது. பரமத்திவேலூரில் அதிகபட்சமாக 36 மி.மீட்டர் மழைப்பதிவு நாமக்கல்லில் 2–வது நாளாக நீடிப்பு நாமக்கல் மாவட்டத்தில் நேற்று முன்தினம் பரவலாக பல்வேறு இடங்களில் மழை பெய்தது. அதிகபட்சமாக பரமத்திவேலூர் பகுதியில் 36 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:– பரமத்தி வேலூர்–36, மங்களபுரம்–26, நாமக்கல்–24, திருச்செங்கோடு–20, எருமப்பட்டி–15, ராசிபுரம்–9, குமாரபாளையம்–6, மோகனூர்–5, சேந்தமங்கலம்–3, புதுச்சத்திரம்–1. நாமக்கல் நகரை பொறுத்த வரையில் நேற்று காலையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. பிற்பகலுக்கு மேல் வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சி அளித்தது. இரவு 7.30 மணி அளவில் 2–வது நாளாக இடி–முழக்கத்துடன் பலத்த மழை கொட்டியது. இந்த மழை யால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுவதை காண முடிந்தது. வாகன ஓட்டிகள் ஆமை வேகத்தில் வாகனங்களை ஓட்டி செல்வதையும் பார்க்க முடிந்தது. இதேபோல மோகனூர், ராசிபுரம், குமாரபாளையம், கந்தம்பாளையம்,

சேந்தமங்கலம், வெண்ணந்தூர், எருமப்பட்டி உள்ளிட்ட நாமக்கல் மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது.

**தாராபுரம் அருகே பண்ணை குட்டை–தடுப்பணையினால் 13 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி சாகுபடி செழித்து வளரும் மக்காசோளம்**



உலகில் வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியாவின் மக்கள் தொகை கூடிக்கொண்டே போகிறது. ஆனால் தானிய சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. ஆண்டுக்கு ஆண்டு மழையும் எதிர்பார்த்த அளவு பொழிவது இல்லை. உலக வங்கி ஒரு பக்கம் விவசாயத்திற்கும், ஏழை மக்களுக்கும் வழங்கப்படும் மானியத்தை நிறுத்து என இந்தியாவுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் அதற்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக மத்திய மாநில அரசுகள் விவசாயத்திற்கு ஊக்கம் அளித்து, தானிய உற்பத்தியை அதிகரிக்க தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றுவதற்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் மூலம் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளை கண்டறிந்து அங்கு ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் குறிப்பாக திருப்பூர் மாவட்டம் மழை குறைவாக பெய்யும் மாவட்டம் என்பதால் ஏராளமான நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. அந்த நிலங்களில் தானிய உற்பத்தியை பெருக்க நீர்வடிப்பகுதி அமைந்துள்ள கிராம ஊராட்சி, நீர்வடி பகுதி குழு, திட்டப்பணிகள் அந்தந்த நீர்வடிப்பகுதிக்கு தேவையான பணிகளை தேர்ந்தெடுத்து கிராமசபையின் ஒப்புதலை பெற்று, கலெக்டர் கோவிந்தராஜ்

மற்றும் மாவட்ட நீர்வடி பகுதி மேம்பாட்டு முகமை அலுவலரின் நிர்வாக அனுமதியின்படி அந்த கிராமத்தில் உள்ள பயனாளிகள் குழு மூலம் இயற்கை வள மேம்பாட்டு பணிகள் – வளர்ச்சிப்பணிகள் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டமானது தாராபுரம், மூலனூர், மாம்பாடி, நாதம்பாளையம், பெரமியம், பகுதிகளில் அந்தந்த பகுதி மக்களின் பங்களிப்புடன் 13 ஆயிரத்து 547 ஏக்கர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஆண்டு முழுவதும் தரிசாக கிடக்கும் நிலங்களை கண்டறிந்து அங்கு எப்படி விவசாயம் செய்யலாம்? அதற்கான நீர் ஆதாரத்தை பெறவும் முயற்சி செய்யப்பட்டது. அந்த வகையில் தனியார் நிலங்களில் பண்ணை குட்டை அமைக்கப்பட்டது. மழை காலங்களில் இந்த பண்ணை குட்டையில் மழை நீர்தேங்கியது. இதன் காரணமாக அந்த பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்தது. இந்த நீரை கொண்டு பயறு வகைகளான உளுந்து, பாசிப்பயிறு, எள், சோளம், மக்காசோளம்,நிலக்கடலை மற்றும் இதர காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்தில் மானவாரி நிலங்களில் மா ரகங்களான செந்தூரம், பெங்களூரம், பங்கனப்பள்ளி, காளாப்பாடி, நீலம் ஆகிய ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதை தவிர பி.எஸ்.ஆர்.1, மற்றும் காஞ்சன், ஏன்.ஏ.7 ரக நெல்லியும்,பி.கே.எம். 1 சப்போட்டா ரகங்களும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் புளி, பப்பாளி, தர்பூசனி, சாகுபடி செய்யப் பட்டுள்ளது. சாகுபடி செய்யப்படும் தானியங்களை உலர வைப்பதற்கு ஆங்காங்கே இந்த திட்டம் மூலம் ரூ.26 லட்சத்தில் உலர் களம் அமைக்கப் பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்களை கிராம மக்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி நேரில் அழைத்து சென்று அளிக்கப்படுகிறது. குறிபாக மண் புழு உரம் தயாரிப்பது குறித்து, அந்தந்த பகுதிக்கு அழைத்து செல்லப்பட்டு காண்பிக்கப்படுகிறது. குறிப்பாக இயற்கை வேளாண்மை, மண்புழு வளர்ப்பு, காளான் வளர்ப்பு, மலர்சாகுபடி, கோழிப்பண்ணை வளர்ப்பு, தீவன வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு என பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மூலனூர், பெரமியம் பகுதிகளில் பட்டா மற்றும் புறம்போக்கு நிலங்களில் இயற்கை வள மேம்பாட்டு பணிகளான பண்ணை குட்டை, கசிவு நீர் குட்டை, தடுப்பணை, மண் வரப்புகள், குட்டைகள் தூர்வாருதல், ரூ.1 கோடியே 77 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த திட்டம் மூலம்

நிலமற்ற ஏழை எளிய மக்களுக்கு வாழ்வாதாரம் பெருகுவதற்கு மகளிர் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் தலா ரூ.24 ஆயிரம் வீதம் சுழல்நிதி, ஆடு, மாடு வளர்ப்பிற்கு வட்டியின்றி சுலபத் தவணையில் திருப்பி செலுத்தும் வகையில் சுழல்நிதி ரூ.28 லட்சத்து 22 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராமப்புற பெண்களின் வாழ்வாதாரம் பெருகி உள்ளது. பண்ணை உற்பத்தி திட்டத்தின்படி திட்ட ஒதுக்கீட்டில் 80 சதவீதம் மானியத்தில் விவசாய இடுபொருட்கள் ரூ.28 லட்சத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டத்தில் வேளாண்காடுகள் அமைத்தல், பழ மரக்கன்றுகள் வளர்த்தல், வேளாண்மை கருவிகள், தேன் வளர்ப்பு, செயல்விளக்கத்துடன் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. எனவே மேற்கண்ட திட்டத்தில் பயன் அடையவிரும்பும் கிராம மக்கள் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்ட அதிகாரிகளை அணுகி பயன்பெறலாம்.

## விளாநல்லூரில் ரூ.9½ லட்சத்தில் 5 பண்ணைகுட்டை–குளம் ஒன்றியக்குழு தலைவர் பார்வையிட்டார்



பெரணமல்லூர் ஒன்றியம் விளாநல்லூர் கிராமத்தில் வேலை வாய்ப்பு உறுதி திட்டத் தின் கீழ் 5 பண்ணை குட்டை, குளம் ஆகிய பணிகள் ரூ.9½ லட்சம் செலவில் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை பெரணமல்லூர் ஒன்றி யக்குழு தலைவர் செல்வராஜ் தலை மையில் சென்று ஆணையா ளர் ராஜகோபால், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மதிவாணன், ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன்

ஆகி யோர் பண்ணை குட் டையை பார்வையிட்டனர். மேலும் மரக்கன்று மா, பலா ஆகியவை ஆயிரம் கன்று நட்டு இதற்கான தண்ணீர் உற்றவும் பணிகள் செய்யும் போது பார்த்தனர். இதில் ஒன்றியக்குழு தலைவர் வீர பத்திரன், ஒன்றியக்குழு துணைத்தலைவர்கற்பகம் முருகேசன் உடன் இருந்தனர்.

**<u>விழுப்புரம் மாவட்டத்தில் 6¾ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி கலெக்டர் சம்பத் தகவல்</u>**



விழுப்புரத்தில் கலெக்டர் சம்பத் தலைமையில் கூட்டம் நடைபெற்றபோது எடுத்த படம்.

விழுப்புரம் மாவட்டத்தில் 6 லட்சத்து 71 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது என்று கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைப்புக்குழுகூட்டம்

விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி பேசியதாவது:-

தடுப்பூசிபோடும்பணி

விழுப்புரம் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் வருகிற 1-ந் தேதி முதல் 21-ந் தேதி வரை 21 நாட்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெற உள்ளது.

முகாம் நடைபெறும் 2 நாட்களுக்கு முன்னர் அந்தந்த கிராம பஞ்சாயத்து தலைவர்கள் வாயிலாக தண்டோரா மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். மேலும் ஆட்டோ மூலம் ஒலிபெருக்கி அமைத்து தகவல் தெரியப்படுத்த வேண்டும்.

6¾லட்சம்கால்நடைகளுக்குதடுப்பூசி

கோமாரி நோய் தடுப்பூசி போடுவது தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் வளர்க்கும் அனைத்து கால் நடைகளுக்கும் 100 சதவீதம் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் 6 லட்சத்து 71 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. திண்டிவனம், செஞ்சி, திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் மற்றும் சின்னசேலம் ஆகிய 7 இடங்களில் குளிர்பதன நிலையம் அமைக்கப்பட்டு தடுப்பூசி மருந்து அனைத்து இடங்களுக்கு எடுத்து செல்லவும், மீண்டும் அதே குளிர்பதன நிலையில் வைப்பதற்கு போதுமான வசதி செய்யப்பட்டுள்ளது. கால்நடைகளுக்கு தடுப்பூசி போடுவதற்கு 106 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழுவிலும் ஒரு கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர், கால்நடை பராமரிப்பு உதவியாளர் என்ற அளவில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இக்கூட்டத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜசேகரன், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் டாக்டர் அப்சல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தி இந்து

தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

## உயர்வுக்கு வழிவகுக்கும் ஒருங்கிணைந்த பண்ணையம்: ஆசிரியர் வேலையை உதறிவிட்டு சாதனை புரியும் இளைஞர்



படிக்கவேண்டும், படித்து முடித்து நல்ல நிறுவனத்தில் கைநிறைய சம்பளத்துடன் வேலை பார்த்து செட்டிலாக வேண்டும் என்பதுதான் இன்றைய இளைஞர்களின் கனவு, குறிக்கோள் எல்லாமே. ஆனால் விவசாயத்தில் பட்டம் பெற்று சென்னை யில் உலகத்தரமான தனியார் பள்ளியொன்றில் நல்ல ஊதியம் பெற்று வந்த இளைஞர் ஒருவர் அதையெல்லாம் ஒரேநாளில் உதறித் தள்ளிவிட்டு விவசாயத்தின் மீது நாட்டம் கொண்டு களமிறங்கி, அதிலும் முழுக்க முழுக்க இயற்கை விவசாயத்தை மேற்கொண்டு வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறார். அந்த சாதனை இளைஞரின் பெயர் கு.ஜெயக்குமார். வைத்தீஸ் வரன்கோயில் அருகேயுள்ள மேலாநல்லூர் அவரது சொந்த ஊர். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் பிஎஸ்சி விவசாயம் படித்து முடித்தவுடன் சென்னை சர்வதேச பள்ளியில் பணி. கிட்டத்தட்ட எட்டு ஆண்டுகள் பணி முடித்துவிட்டு ஒரே நாளில் அதை உதறி விட்டு தற்போது விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார். மேலாநல்லூரில் தனது தந்தையின் கடின உழைப்பால் வாங்கப்பட்ட 20 ஏக்கரில் இயற்கை விவசாயத்துடன் கூடிய ஒருங்கிணைந்த பண்ணையம் செய்து பயன் ஈட்டி வருகிறார். நன்செய் நிலம், நிலத்துக்கு எரு கொடுக்க ஆட்டுப் பண்ணை, ஆட்டுக்கு உணவு கொடுக்க புல் வளர்ப்பு, இயற்கை விவசா யத்துக்கு அடிப்படையான பஞ்சகவ்யம், அமிர்த கரைசல் ஆகியவற்றை கொடுக்க பசுமாடு என்று

அத்தனையும் ஒருங்கே கொண்டதாக காட்சியளிக்கிறது அந்தப் பண்ணை வளாகம். ''பைசா செலவில்லாமல் விவசாயம்னு நம்மாழ்வார் அய்யா சொன்னதை கேட்ட நிமிடத்தில் தான் எனக்கு இயற்கை விவசாயத்தின் மீது காதலே வந்தது. அடுத்த நிமிடம் வேலையை துறந்துவிட்டு ஊருக்கு திரும்பி அப்பாவிடம் போய் இனிமே விவசாயத்தை நான் பார்த்துக்கிறேன்பா என்று சொன்னதும் அவருக்கே அதிர்ச்சி. இதுவரைக்கும் வயல் பக்கமே வந்ததில்லையேடா, இப்ப திடீர்னு விவசாயத்தை பார்க்கிறேன்னு சொல்றியே என்று கேட்டவர், என்ன நினைச்சாரோ சரிப்பா பார்த்துக்கன்னு சொல்லிட்டு ஒதுங்கிட்டார். இது நடந்தது மூன்று ஆண்டுக்கு முன்பு.. அப்ப வயலுக்கு வந்தவன் இயற்கை விவசாயம்தான்னு முடிவு செஞ்சதால முன்னோடி இயற்கை விவசாயியான பாலாஜி சங்கரை போய் பார்த்து ஆலோசனை கேட்டேன். அவர் 20 ஏக்கர்லயும் உடனடியா இயற் கை விவசாயத்துல இறங்கக் கூடாதுன்னு தடுத்து வெறும் 3 ஏக்கர்ல இயற்கை விவசாயம் செய்ய கத்துக் கொடுத்தார். அடுத்த ஆண்டு அதை ஆறு ஏக்கர் ஆக்கினேன், கடந்த ஆண்டில் பத்து ஏக்கரில் இயற்கை விவசாயம். இந்த ஆண்டுதான் 20 ஏக்கரிலும் முழுமையாக இயற்கை முறையை கடைபிடிக்க போகிறேன்" என்கி றார் ஜெயக்குமார். இயற்கை விவசாயம் செய்ய தோதாக 20 ஏக்கரிலும் டேஞ்சா என்னும் தக்கைப்பூண்டு விதைத் திருக்கிறார். அது ஆளுயரம் வளர்ந்து காடாக மண்டிக் கிடக்கிறது. வரப்போகும் சம்பா சாகுபடிக்கு உரமாக இதுவும், சேகரித்து வைக்கப் பட்டிருக்கும் ஆட்டுப்புழுக்கையும் மட்டுமே போதுமாம். ஒட்டுமொத்த உரச் செலவும் இதற்குள் அடங்கி விடுமாம். பயிர் கிளம்பும்போது மாட்டு சாணம், சிறுநீர், பால், தயிர், நெய் ஆகியவை சேர்த்து செய்யப்பட்ட பஞ்சகவ்யம், அமிர்தகரைசல் ஆகியவை வயலில் சேர்க்கப்பட்டு பயிருக்குச் செறிவு ஊட்டப்படுமாம். தற்போ தைய நிலையில் நாற்றடி, நடவு, களையெடுப்புக்கு மட்டும் தான் கையிலிருந்து பணம் செலவாகிறது. அதற்கும் இந்த ஆண்டு செலவில்லை. கொடி ஆடு வளர்ப்பின் மூலமாக அந்த செலவு ஈடுகட்டப்படுகிறது என்கிறார். ஒரு கொடி ஆடு ரூ. 12 ஆயிரத்துக்கு விற்றால் அந்த தொகை ஒரு ஏக்கருக்கு செலவாகும் ஆட்செலவு அடங்கிவிடும் என்கிறார் ஜெயக்குமார். நமது பாரம்பரிய ரகமான கிச்சிலி சம்பாவைத் தேடிப் பிடித்து இயற்கை முறையில் விளைவித்து வருகிறார். இவரிடம் கிச்சிலி சம்பாவை

தமிழகமெங்கும் உள்ள இயற்கை விவசாயிகள் முன்பதிவு செய்து வாங்கிச் செல்கிறார்கள். மற்ற ரகங்களைவிட இது பெரிய அளவில் இவருக்கு லாபத்தை ஈட்டித் தருகிறது. "தற்போதைய நிலையில் செலவின்றி விவசாயம் செய்து வருடம் ஒன்றுக்கு ஏக்கருக்கு ஐம்பதாயிரம் ரூபாய் லாபமாக கிடைக்கிறது. இதை ஒரு லட்ச ரூபாயாக உயர்த்திட என்ன வழி என்று பார்த்து அதை நோக்கி போய்க் கொண்டிருக்கிறேன்" என்று கண்கள் மின்னச் சொல்லி முடித்தார் இயற்கை விவசாயி ஜெயக்குமார். தொடர்புக்கு: 99620 09302

## <u>பெங்களூரில் விவசாயக் கண்காட்சி</u>

மாபெரும் விவசாயக் கண்காட்சி பெங்களூரில் உள்ள சர்வதேச கண்காட்சி மையத்தில் ஆகஸ்ட் 22-ம் தேதி முதல் மூன்று நாள்களுக்கு நடைபெறுகிறது. விவசாயம், வேளாண்மை கருவிகள், பால் உற்பத்தி, கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பு மற்றும் உணவுப் பதப்படுத்துதல் உள்பட பல்வேறு விவசாயம் சார்ந்த தொழில்கள் குறித்த அரங்குகள் கண்காட்சியில் இடம்பெறுகின்றன. இந்தியாவின் பல முன்னணி வேளாண்மை தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி, இத்தாலி, துருக்கி, போலந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா, சீனா உள்பட 20-க்கும் மேற்பட்ட வெளிநாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களும் தங்களது கண்காட்சி அரங்குகளை அமைக்க உள்ளன. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க சர்வதேச அளவில் நடை பெற்று வரும் முயற்சிகள் மற்றும் அனுபவங்களை ஒரே இடத்தில் இருந்து விவசாயிகள் சேகரிக்கும் வகையில் இந்தக் கண்காட்சி அமையும் என கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## வானிலை தகவல்கள்

விவசாயிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு தொடர்பான தகவல்கள் www.imdagrimet.gov.in என்ற இணையதளம் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப் படுகிறது. நமது உள்ளூர் அளவிலான வானிலை தொடர்பான பல விவரங்களை இந்த இணையதளம் மூலம் விவசா யிகள் தெரிந்து கொள்ளலாம்.

**உணவு மானியம்: டபிள்யூ.டி.ஓ. பேச்சுவார்த்தையில் தீர்வு: இந்திய வர்த்தக அமைச்சக அதிகாரிகள் நம்பிக்கை**

செப்டம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற உள்ள உலக வர்த்தக அமைப்புடனான (டபிள்யூ.டி.ஓ) பேச்சுவார்த்தையில் உணவு மானிய விவகாரத்துக்கு தீர்வு எட்டப்படும் என்று வர்த்தக அமைச்சக அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். மொத்த உணவு உற்பத்தியில் 10 சதவீத அளவுக்கு மானியம் அளிக்க வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பு வலியுறுத்தி வருகிறது. அதுவும் இந்த மதிப்பீடானது 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த விலையில் கணக்கிடப்பட்டுள்ளது. 1986-1988-ம் ஆண்டு விலை அடிப்படையில் கணக்கிடக்கூடாது என்றும், இந்த அடிப்படை ஆண்டை மாற்றியமைக்க வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தி வருகிறது. இந்தியா உணவு மானியத் துக்காக ஒதுக்கும் தொகை 10 சதவீதத்தை விட அதிகமாகும். டபிள்யூ.டி.ஓ. நிபந்தனையை ஏற்றால், அபராதத் தொகையை இந்தியா செலுத்த வேண்டி யிருக்கும். இதனாலேயே இந்தியா இந்த விதிமுறையில் மாற்றம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஏழை விவசாயிகள் மற்றும் ஏழைகளின் நலன் காக்கப்படும்; இதில் ஒருபோதும் டபிள்யூ.டி.ஓ. நிபந்தனைகளை இந்தியா ஏற்காது என்று மத்திய வர்த்தகத்துறை இணை அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஏற்கெனவே திட்டவட்டமாக தெரிவித்து விட்டார். கடந்த ஜூலை 31-ம் தேதி மேற்கொண்ட நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று அவர் கூறியுள்ளார். மானியத்துக்கு நிரந்தர தீர்வு எட்டாதவரையில் இதை ஏற்க இயலாது. தற்போது உள்ள 10 சதவீத மதிப்பீடு தவறான கணிப்பு என்றும் இது ஏழைகள், விவசாயிகளை கடுமையாக பாதிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதார விலையில் பெறப்படும் உணவு தானியத்தின் அடிப்படையிலும், அவற்றை குறைந்த விலையில் விற்பனை செய்வதன் அடிப்படையிலும் எவ்வித அபராதமும் இன்றி கணக் கிட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தி வருகிறது.